

படைப்பு குழுமம்

கவிதை

# மின்னிதழ்

01-08-2018 பதிப்பு 23

# ருசி

ஞாயிற்றுக்கிழமையானால்
விடிந்தும் விடியாததுமாய்
சந்தன நிற சாரதாஸ் பையுடன்
வெளிக் கிளம்புவார் அப்பா
தங்கைக்கென கோழியும்
அம்மாவுக்கான நெஞ்செலும்புடன்
எனக்குப் பிடித்த கல்லீரலையும்
வாங்கிக் கொள்வார்
மீன் பிரியரான அப்பா
பெருமாளுக்கு விரதமிருக்கும்
ஒரு சைவ சனிக்கிழமையன்று
மூன்றாவது முறையாக நெஞ்சை பிடித்தபடி சாய்ந்தார்
இப்போதெல்லாம்
அப்பா இல்லாத ஞாயிற்றுக்கிழமைகளை
காலை இட்லி சாம்பார் சகிதமும்
மதியம் மிஞ்சிப்போனால்
முட்டை வகைகளுடேயே
முடித்துக் கொள்ள பழகிக்கொண்டோம்
ஒவ்வொரு வீடும்
உணவின் சுவையை மட்டுமே
புசித்துக் கொண்டிருப்பதில்லை
ஆணியில் மாட்டப்பட்டிருக்கும்
அப்பாவின் சந்தன நிற சாரதாஸ் பை
சமீபமாக நிறைவதேயில்லை
எங்கள் ஞாயிற்றுக்கிழமைகளைப் போல



ர. மதன் குமார்

சில மணி நேரம் வானம்
தரையில் தங்கிப் போகும்
நாளைய மறுநாள்!
உங்களுக்கான தேவதைகளிடம்
சொல்ல வேண்டிய
ரகசியங்களை
குறிப்பெடுத்துக்கொள்ளுங்கள்.

அப்போது
உங்கள் முற்றத்துக் கம்பத்தில்
சிறு நிலா தொங்கக்கூடும்.
காதலியை கைப்பிடித்து
நிலாவலம் திட்டமிடுங்கள்.
முத்தம் தடைசெய்யப்பட்டுள்ளது.

முப்பாட்டன்கள் சொர்க்கத்தில்
சிலரும், நரகத்தில் சிலரும்
இருக்கலாம்.
சொத்துக்கணக்கின்
தாவாக்களை தீர்த்து
கொள்ளுங்கள்.

முந்தைய ஜென்மத்தில்
உங்களின் நடக்காத
ஆசைகள் சுற்றி வரலாம்.
விசாரித்து தீர்த்து வைக்க
தயாராயிருங்கள்.

கடவுளர்கள் அறைப்பக்கம்
போய்விடாதீர்கள்.
அவர்கள் இப்போதைய
மனிதர்களை பார்க்க
பயப்படுவார்களாம்.

சொர்க்கத்தின் அந்தப்புரத்தில்
அனுமதி இலவசம்
அதற்காக நீங்கள்
முட்டையாய் சுமக்கும்
இச்சைகளை இறக்கிவிடாதீர்கள்.

மரணப் பிரிவில் கணக்காய்வு
நடக்கும் நேரம்...
உங்கள் விதியைப் பற்றி
விசாரிக்காதீர்கள்.
உங்கள் விசாரணை
கவனிக்காமல் விடப்படும்.

சில மணி நேரம் வானம்
தரையில் தங்கிப் போகும்
நாளைய மறுநாள்!

**மதுசூதன்**

# உடற் கூறு ஆய்வறிக்கை

கொல்லப்பட்டவர்கள்
தோண்டியெடுக்கப்பட்டனர்...
நீண்ட போராட்டத்திற்குப்பிறகு
நிகழ்த்தப்பட்ட பிரேத பரிசோதனையில்
கொலை செய்த விதம் குறித்து
விரிவாக விவரிக்கப்பட்டிருந்தது..!
முறிந்திருந்த எலும்புகளை..
சிதைந்திருந்த முகத்தினை..
தாக்கப்பட்ட ஆயுதங்களை
ஆயுதம் பாய்ந்த ஆழத்தினளவை
கத்திக் குத்துகளின் எண்ணிக்கையை
காணாமல் போயிருந்த சுண்டு விரலை
என ஒவ்வொன்றாய் செத்துப்போனவர்களின்
உடல் முழுவதும் உருவி உருவி
உடற் கூறு ஆய்வுகள் சொல்லியிருந்தது...
உடலில் பட்ட காயம் முதல்
உயிர் போன காலம் வரைக்கும்
துல்லியமாய் எழுதப்பட்டிருந்த
அந்த அறிக்கையில்
விஞ்ஞானத்தின் அடிப்படையில்
கடைசிவரை எழுதவே முடியவில்லை
தோண்டியெடுக்கப்பட்ட காதலர்கள்
கொல்லப்பட காரணமாயிருந்த சாதியை...!

**சந்துரு**



# சாம்பலில் ஊற்றப்படும் பன்னீர்

அதனால் என்ன?
காதலில் இருந்து குரைக்க ஆரம்பிக்கலாம்.,
மனம் உறக்கத்திலிருந்து எழுந்த பின்பும்
ஒளியின் துவாரம் கசியக்கூட செய்யாத
இருண்ட நனவிலி பகுதியிலேயே
உறங்கிக் கொண்டிருக்கிறது
பொன்னிறத் துகள் படிந்த
நாய் ஒன்று.

உடன்பாட்டு மனோபாவம்
அன்பினுக்கு கச்சாப் பொருள்
கரும்புள்ளிகளைக் கூர்ந்து கூர்ந்து
வெண் நிற முட்டைகளைக் குறை
கூறுவதே பெரும் பொழுது போக்காக
உருப்பெற்று விட்டது.

கட்டுப்பாடின்மையின்
அடித்தளத்தினது சாரம்
நொதித்துத் தளும்பும்
இளகலான கருணையினால்
உற்பவித்திருப்பதை மிகத் தாமதமாகவே
சுட்டிக்காட்டப்படுகிறது.

இரக்கத்தை ஆராய முனைகையில்
இருப்பின் துடிப்பாய் நிகழும்
இருதயத்தின் துடிப்புகள்
அறியாதவற்றில் நின்று
வழிவிடும் வாயிலை மறைத்தபடி
சிரித்து நிற்கின்றது.

கடவுளர்கள் போதாமையில்
அறிந்தவர்களின் பெயர்களை
அடுத்தடுத்துப் பிதற்றி
நெடு குரலில் பெருங்குடிகாரன்
வசைகளை ஏனென்றே அறியாமல்
இரவைக் குலைத்தபடி
ஊளையிடுவதில் திளைக்கிறான்.

நட்சத்திரம் சிதறி வீழ்கையில்
ஒற்றைப் பூவினை நினைவு கொள்ள மறந்து
நாக்கை கடித்துகொள்கிறாள்
மாடியில் நின்றிருக்கும் ஒற்றைப் பெண்.

அம் மாநகரத்தின் சுவர்கள் பல கடந்து
படுக்கையறையில் தன் உடல் குறுக்கி படுத்திருக்கும்
தன் காதலியை
மானசீகமாய் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறான் ஒருவன்.

சப்தங்களை எல்லாம் தரையோடு தரையாக
நசுக்கித் தேய்த்தபடியிருக்கும்
இரவின் பருத்த உடலை
மேலும் மேலும் இறுக்கி அணைத்தபடி
துடித்துப் புணர்கிறது தனிமை எனும் குறி.

**வேதநாயக்**

அந்தக் காகம்
அப்படித்தான் ஒவ்வொன்றாகச் சேர்த்தது,
அதன் கூடு மிக அழகானது...
என் கனவுகள் போல்
முட்டைகள் அடைகாத்துக் கொண்டிருக்கின்றன,
வெப்பம் உயிர்ப்புடன் சுவாசிக்கிறது,
காகம் என்னைப்போல் அசட்டையாக இருப்பதில்லை,
அது தன் கனவுகளை
பத்திரமாக வைத்திருக்கிறது,
கால்களின் நகங்களைக் கூர் தீட்டியிருக்கிறது,
இறகுகளின் சுவர்கள் உறுதியாகவே இருக்கின்றன,
இரண்டொரு நாட்களில் அதன் கனவுகள்
சப்தமெழுப்பக்கூடும்...
என் கனவுகளில் இன்னமும் உறங்கிக் கொண்டிருக்கிறேன்...
படுக்கையறையின் திரைச்சீலை
வெளிச்சத்தைத் தடுத்திருக்கிறது...

**முகமது பாட்சா**



வண்ணத்துப் பூச்சியின் அழகு எனக்கு
இருக்க வாய்ப்பில்லை தான்
நான் பறக்க நினைக்கும் போதெல்லாம்
பட்டென்று என் இறகை பிடித்துக்கொள்ளும்
இந்த சமூகம் இருக்கும் வரை....!!!

**சரண்யா சத்தியநாராயணன்**

அணில் பூட்டைத்தூரிகையால்
ஆகாசத்தின் அடிவாரத்தில்
என் தேசம் வரைந்துவிட்டுப் பார்க்கிறேன்
புள்ளிகள் தோறும்
புரையோடிக் கிடக்கிறது
அம்மைத்தழும்புகள்...
மண்ணின் முதுகில் குத்திய
மங்கல நாட்களின் எச்சங்கள்
வடுக்களாய் இன்னும்
வரலாற்றின் சுவடுகளில்...
உதடுகுவித்து விசில் ஊதி
கூட்டத்தைப் பெருக்குகிறேன்
இன்னும்"ஒன்றுபடுவோம்" கோஷங்கள்
ஊனமுற்றக்குரல்களில்...
மையிருட்டின் அடர்த்தியினிடையில்
சிக்கிய மல்லிகை வாசனையில்
மக்கள் சேவையாளர்களின்
மயக்கத்தின் தடங்கள்...
பொலிவிழந்த மாலைநேரப்பூ ஒன்றின்
மேனியில் கீறல்களாய்
ஆபத்பாந்தவான்களின் ஆசிர்வாதங்கள்..
இலைகளால் அம்மணத்தை மறைத்த
நவீன சிறுவர்களின் காயங்களை
நக்கிருசித்த நாவுகளில் இன்னும்
எச்சிலின் ஊற்றுக்கண்...
போதிமரத்தினடியில் புதையல் இருப்பதாக பூஜைக்கு
அழைத்தவர்களிடம்
ஒளிந்துக்கிடக்கிறது
மரத்தையே பேரம்பேசும்
சுயநல சூட்சுமம்..
சொட்டுச்சொட்டாய் தேனை சேகரிக்க
சோம்பிக்கிடந்தவர்களின் பார்வைகள்
பூக்களின் பின்புறத்தைப் பிளப்பதிலேயே
குறியாக இருக்கிறது..
நல்லநேரத்தை கணக்கிட
குறிச்சொல்ல வந்தவர்கள்
குச்சியால் ரேகைகளைத் தொட்டுவிட்டு
கூலியாய் உள்ளங்கையை கேட்பதுதான்
வேடிக்கையாக இருக்கிறது...
சில கயிறுகளிலும்
சில கண்ணிகளிலும்
சில பார்வைகளிலும்
சில வலைகளிலும்
சில மையங்களிலும்
சில வண்ணங்களிலும்
சிக்கி ஊசலாடும் எங்கள் உயிர்
மரம்விட்டு மரமல்ல
கண்டம்விட்டு கண்டம்தாவும்
வானரத்தின் கைகளில் பூவாகிக்கிடப்பது
"மணமாலைத்தொடுப்பதற்காக"
என்போரின்
மனநிலையின் மீது என்னிடம் வேரூன்றியிருக்கிறது
வீரியமான சந்தேகம்.

**ஐ.தர்மசிங்**

# நட்சத்திரத்தில் உறங்கிய பறவை

பறந்துவிடுவதற்கான முன் ஆயத்தம்
சிறகை தூசி தட்டி நிமிர்ந்து
சோம்பல் முறித்து எழுகிறது பறவை.
வானின் நீண்ட.வெளியில்
பூமியின் தூரத்தை மெஞ்சிய
அந்தப் பறவை.
ஒரு சொல்லொன்றை ஆகாயத்திலிருந்து
உதிர்த்து விடுகிறது.
அது மேகங்களில் மறைந்து
தாமதமாக கீழுறங்குகிறது.
பெரும் மலைகளில் மோதுண்டும்
பெரும் மரங்களில் மோதுண்டும்
நதிகளில் விழுந்து நனைந்தும்
பூமிக்கு இறங்குகிறது.
அது உதிர்த்த சொல்லில் வடிந்த
குருதித் துளிகளின் தடயம்
கம்பளிப்பூச்சி வரைந்த கோடுகளைப் போல
ஓவியமானது.
தாமதத்தின் வெறுப்பை பறவை
ஒரு சகாராவின் சூட்டை சுமக்கச் சொல்லி
அந்தச் சொல்லுக்கு கட்டளையிடுகிறது.
மறுத்து விடுகிற சொல்லை
ஆகாயத்துக்கு புறப்படச் சொல்கிறது
சொல் கடந்த தூரத்தை பறவை ஒத்திருந்தது
இரவு சொல்லையும் பறவையையும்
பிடித்துக் கொள்கிறது.
நட்சத்திரம் உறங்க அழைக்கிறது
பறவை சொல்லோடு தஞ்சம் புகுந்து கொள்கிறது
இப்போது பறவை தன் தூக்கத்தில்
அந்த சொல்லை பிரதி செய்கிறது
இயலாமையென.

**ஜே. பிரோஸ்கான்**



# எப்பக்கம் புதையலாம்

கனவிற்கு மெல்லிய தோலுள்ள தேகமும்
செப்புக் கம்பியின்
அதிர்வுகொண்ட குரலும் உண்டு
வாக்குமாறாதவர்கள்
தந்திரக்காரர்களின் எதிர்துருவமாகிப் போவது
தத்துவ தரிசனம்
சதுரப்பிரண்டையின் நார் போல
நாடு உரிக்கப்படுகிறது
இதுகுறித்து
யாருக்கு கடிதம் எழுதலாம்
வீடுகளின் புறம் இடிந்து விழுகையில்
அகத்தை
சுருட்டுப் புகையிலையாய் நாம் யாரிடம் நீட்டலாம்
காதலை வியர்வையாய் உணர்பவர்களிடமிருந்து எப்படி காதலாய்
ஆவியாகலாம்
முக்கோணத்துள் மூழ்கியிருக்கும் வாழ்வில்
எப்பக்கம் புதையலாம்
ஓங்கி எரியும் சுடர் அடியில்
அறுபத்து நான்கு நீலக்கீற்று பாய்கையில்
எதனை எந்த உச்சியில் விடலாம்
நாவின் சூடு
குகை ஓவியத்தின் உயிராய் நடுங்குகிறது
நண்பர்களே
பூவின் மடல் வெளிச்ச சாஸ்திரம்
பெண்ணின் கருப்பை காலம்
கேளுங்கள்
காலாடுதண்ணீர் கூட அற்ற ஊரின் பாடல்
சாம்பலிலிருந்து உயருகிறது
கற்பூரவல்லியின் வாசனை பெய்தால்
மழையோடு கண்ணீரும் உதிரும்
எதனடியில் எதனடிப்படையில்
எப்படி விட்டோம் உரிமைகளை
இக்காலத்தில் ஏன்
தராசுகளின் முட்கள் வானமார்க்கத்தில்
அதிகம் செல்கின்றன
வளர் இருள் தண்டில்
வஞ்சனையின் பற்றுக் கம்பிகள் சுருள்கின்றன
ஒத்தையடிப் பாதை
ஒப்பிலாத கனியாக யாவருக்கும் கனியும்
நம்பிக்கைக்கு
கடினமான தோலுள்ள தேகமும்
வைரக் கம்பியின் அதிர்வுகொண்ட குரலும் உண்டு
மேலும்
வளைந்த முதுகும் முனகி உதிரும் நரையும் உண்டு

**தேன்மொழி தாஸ்**

# சிக்காத ஆறு

உடைந்த நிலா
பிறை நெற்றி

உள்ளம் நீந்தி
உருவான கனவு

கடல் அலைக்கு
முத்தமிட்டு
அவள் பாதசுவடு

மலைக்குன்று மிரண்டது
சாட்சி
ஒளிந்த மார்புகள்

வரைந்த பின்னும்
நிறைய வில்லை
வானவில்

காடு தீர்ந்தது
தேடுபவன்
தொலைதல் நன்று

கொக்கும் மீனும்
வலை விரிக்க
சிக்கவில்லை ஆறு

**கவிஜி**



# முள்ளாய் குத்தும் முள்வேலிகள்

நீறுபூத்த தணல்களாய் நினைவுகள்...
கண்ணீரின் கொந்தளிப்புக்கள்
சுடுநீரின் வெம்மையாய்...

உயிரைத் திருகும்
வதை நிறைந்த வலி......
உக்கி உலர்ந்து எருவானோரின்
ஆக்கிரமித்த அழகு மொழி காற்றோடு.....

அன்னையின் அமுதத்தைத் தேடும்
குழந்தையின் சிறுவிரல்களின்
நினைவுத் தழுவல் நெஞ்சோடு.......

மூடிய சுவருக்குள் நசுங்குண்டு
மெய்யிடிந்து ஒப்பாரியிடும் கதறல்
மழையோடு கரைந்த இடிமின்னலாய்....

ஏதிலராய் போன வாழ்வின் துடிப்பில்
எழுதப்படாத காவியங்களின் நீட்சி
ஓவியனுக்குத் தூரிகையற்ற நிலையாய்....

நொடிப்பொழுதில் மூச்சிழந்து
புதையுண்டோரின் வாழ்நாள் வலி
நெஞ்சுக் கூட்டுக்குள் நெருப்போடு
நெடும் பயண யாத்திரையாய்.....

வன்னி யுத்த அவலச் சகதி
குருதியும் பிணமும் மணமுமாய்....
கந்தக நொடியும் கண்ணீர்க் கதைகளும்
நீதி கேட்டிரங்கும் அலையடிப்பாய்...

இன்னும் இரங்காத இரட்சகர்கள்
உள்ளும் வெளியுமாய் தந்திர மேய்ப்பராய்
ஆண்டுகளை இழுத்தடிக்கும் கள்ளத்தனம்.

கண்ணீரோடு கட்டித்தழுவி சரணடைய
கண்காண அனுப்பினோரை
காணமல் போனோர் என
பொய் உரைக்கும் நரித்தந்திரம்...

மன்னாரில் தொடங்கி முள்ளி
வாய்க்காலில் முடிந்த கதை...
கதையல்ல இனத்தின் அழிப்பு...
இனத்தின் இறைமைச் சரிவு...

கள்ளப் படைகளும் கைக்கூலிகளும்
இனத்தின் சங்கறுத்த சரித்திர நீட்சி....

இரத்தமும் சதையும் உயிரும்
உரமாய் விதைத்தமண்ணின்
அவல உயிர்ப்புகள் மூண்டெரிய
முள்ளாய் குத்தும் முள்வேலி நினைவுடன்
நடமாடும் பிணங்களாய் நாம்.

**வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா**

குளிரூட்டப்பட்ட
அறையிலிருந்து புறப்பட்ட
துப்பாக்கி குண்டு...
வெடித்து வெளியேற்றுகிறது
நூற்றாண்டிற்கான அழுகையை.
வெயிலேறிய கருங்கல்லிற்குள்
பதுக்கி வைக்கப்பட்டுள்ளது
காலக்கோபம்.
எப்போதாவது கற்களை
சந்தித்தால் தொட்டுப்பாருங்கள்
கல்லுக்குள் ஈரம்.
உயிரற்ற உடலுடன்
பயணிக்கும் குண்டு
நிர்ணயிக்கப்பட்ட திசையில் பயணித்து
மீண்டும் குளிரூட்டப்பட்ட
அறைக்கு திரும்புகிறது.
குண்டுகளோ...
கற்களோ...
சொற்களோ...
அவை அவைகளுக்கானவை அல்ல.

**தோழன் பிரபா**

சிறகடித்தபடி பறவை
பின் தொடர்கிறது
அதே மௌனம்

**கி.கவியரசன்**



## கிடார்

எனக்கு கிடார் வாசிக்கத்தெரியாது....!!!
என்னிடம் நீங்கள் ஒரு கிடாரை கொடுப்பீர்களானால்
அதன் அழகை கவிதையாய் வாசித்துக்காட்டுவேன்..!!!

அக்கருவியை நீங்கள் அரவணைத்து
வாசிப்பதைக்காணும் போதெல்லாம் என்
பொல்லாத கண்களுக்கு கீழே விழப்போகும்
போதைமங்கையை தாங்கிப்பிடிப்பது
போலல்லவா தோன்றுகிறது.. ?

நாளங்களின் திருகாணிகளை
திருகிக்கொண்டே இருக்காதீர்கள்..!!!
பாவம் இசைராணி!!!
இனியும் தாங்காது அவளின் காதுகள்....!!!

முதுகோடு மாட்டிக்கொண்டு நீங்கள் வாகனங்களில்
செல்லும்போது ஒரு இசைப்போருக்கான ஆயுதமேந்திய
ஆயத்தம் தெரிகின்றதே..?

மேடையில் மின்சாரகிடார் வாசிக்கும் கலைஞரை
நீங்கள் கவனித்திருக்கிறீர்களா...?
மின்சாரம் தாக்கியதுபோலாவே குதிக்கின்றார் பாருங்கள்..!!!

வெளியேறும் இசைக்கு இடம் போதவில்லை போலும்..?
வெளிவாயிலைப் பாருங்களேன்..!!!
எவ்வளவு பெரிய பொந்து.. ?

இக்கருவியை வாசித்தபிறகு சுவற்றுமூலையில்
சாய்த்துவைக்கவேண்டாம்...!!!
சமைந்த பெண்ணொருத்தி
கூனிக்குறுகி முட்டியில் முகம்புதைத்து விம்முகிறாள் பாருங்கள்..!!!

ஒரு கிடாருக்குத்தான் எத்தனை தன்மைகள்..?

சிறு குழந்தைகளிடம் மேளமாகிவிடும்..!!!
சிறுவர்களிடம் ஏ-கே-47 ஆகிவிடும்..!!!
பெரியவர்களிடம் வீணையாகிவிடும்..!!!
வாலிபர்களுக்கு காதல் கருவி.. !!!

சினிமா கதாநாயகர்களுக்கு வாசிக்கத்தெரிந்த
ஒரே இசைக்கருவி கிடார் என்பது
உங்களில் எத்தனை பேருக்குத்தெரியும்.. ?

நீங்கள் வேண்டுமானால் கிடாரின்
இசையை ரசித்துக்கொள்ளுங்கள்!!!

நான் அதன் மெலிந்த
இடைப்பகுதியின் நளினத்தை ரசித்துக்கொள்கிறேன்..!!!
உங்களுக்கு இசையை தரும் அதே கருவிதான் எனக்கு
கவிதைகளை அள்ளித்தருகிறது....!!!
இசைக்காக கவிதை எழுதியதால்
என்னை நீங்கள் "இசைஞன் " என்று
கூப்பிடவேண்டாம்..!!!
நான் என்றுமே 'கவிஞன்' தான்.

**ஆனந்த்**

வீடுபற்றிய நினைவுகளில்
பூட்டப்பட்டக் கதவுகளில்லை.
வீடு நினைவெங்கிலும்
தனது சன்னல்களைக் கூட
திறந்தே வைத்துள்ளது.
நினைவினுள் காற்று வீசும் பொழுதெல்லாம்
சாளரக் கதவுகள் லப்-டப் எனும் ஓசையோடு
அடித்துக் கொள்கின்றன.
இருதயம் போல் துடித்துக் கொண்டிருக்கும் நினைவினுள்,
தனக்கு குழந்தை பிறந்த செய்தியைக்
கூற வந்தவனின் மகன்
நிஜத்தில்,
தன் தகப்பன் இறந்த செய்தியைக்
கூற வந்துள்ளான்.
நிஜத்தில்,
வீடு இறுக மூட
திறக்க இயலாபடி தாழிடப்பட்டுள்ளது.
அதன் கதவுகளை
அழுதவாறு தட்டிக்கொண்டிருப்பவனுக்கு,
நினைவுகளின் வழியே
பதில் கூற வருகின்றேன்.
ஜனனம், மரணம் பற்றியறியா
குழந்தையொன்று
வீட்டு வாயிலில் அழுதவாறுள்ளது.
அதைத் தூக்கி இடது மார்பில் வைத்துக்கொள்ள,
நிமிடத்திற்கு எழுபத்தியிரண்டு முறை சுரக்கிறது
பெருங்கருணை ஊற்று.

**ராஜ் சௌந்தர்**



.

தன் வாலை தானே கவ்வி சுகிக்கும் அரவமென
என் பொழுதுகளை நான் கவ்வி கிடந்தேன்
அப்போது

உயிரை உயிர் சேரும் ஒரு ஏகாந்த இரவில்
என் மனம் இரகசியமாய் திறந்தது
நீ நுழைந்து வர

விளக்குகளற்று இருள் மண்டிக்கிடந்த கூடத்தில்
நட்சத்திரங்களை மின் மினிப்பூச்சிகளாக்கி
சுவர்களில் ஒட்டி வைத்துப்புன்னகைத்தாய்
சுடர்மிகும் கணங்களாகின

முழுமையெய்திய புளகாங்கிதத்தில்
தெருவெங்கும் கசிந்தோடிக்கொண்டிருந்தேன்
பரவச நதியாக நான் அந்த இரவில்

இந்த உயிர்ப்பறவைக்கு இனி இதுதான் கூடு என்று
நீ சொன்னது நேற்று சொன்னது போலிருக்கிறது
ஆனால்
காலமோ சிறகடித்துப்பறந்து விட்டது
ஒரு மாமாங்கத்திற்கும் அப்பால்

நிரம்பி வழியும் என் மதுக்கோப்பையில்
அடியாழத்திலிருந்து மேலெழுந்து வரும்
அத்தனை குமிழ்களும்
அந்த தூக்கனாங்குருவியின் மூச்சுக்களன்றி
வேறு எதுவோ நீயே சொல்?

எங்கோ தொலைவிலிருக்கும்
உன்னை நம்பி என் பால்யம்
ஒற்றை இறகாய் பயணித்து வருகிறது சேர்வதற்கோ ?

வெற்றிடங்களை உறுத்திக்கொண்டிருக்கும்
என் மிச்ச இரகசிய இருப்பையும்
தேக்கு மர குருவி கூடொன்றில்
பாடம் பண்ணி வைத்து விட்டு
நான் பறந்து விட எத்தனிப்பதும் அதற்குத்தானோ?

தூக்கம் விழியடையாத நாட்களில்
உன் கால்களை என் வீட்டிற்கு
இழுத்து வரும் பிரத்தியேகமான அந்த ஒன்று
என்று நம்பி

கரும் இரவுகளை மத்தாப்பாக
கொளுத்தி தீர்த்து விட்டு போன நாளொன்றில்
நீ வந்தால் காணக்கூடும்

வாசலில் அடர்ந்து வளர்ந்திருக்கும்
செம்பருத்தி மரத்தில் தேன் சிட்டின் கூடொன்றில்
இரகசியமாய் ஒளிந்திருக்கும்
எதுவும் அடைகாக்காத முட்டை ஒன்று
உன் விரல்களின் வெது வெதுப்பான
ஸ்பரிசத்திற்கு ஏங்கிய படி
உருண்டு கொண்டிருப்பதை

**தங்கேஸ்**

ஒரு மரண வீட்டில்
இறந்தவரின் தொலைபேசி
ஒலித்துக் கொண்டே இருக்கிறது.
சாமந்தி பூக்களில் நடுங்கும்
ஒப்பாரிகளில் வந்து
ஒன்றுகலந்துவிட அந்த யாரோ ஒருவரின் குரல் விரும்பி
இருக்கலாம்.
குரல் வழியாகவே கிளர்ச்சி அடைந்த உறவுகள்-
குரல் வழியாகவே அந்த மரண வீட்டில் நுழைந்து துக்கம்
விசாரித்து விட நினைத்திருக்கலாம்.
எல்லாவற்றையும் மிரள மிரள பார்த்துக் கொண்டிருந்த
குழந்தை ஒன்று ஓயாமல் ஒலித்த அந்த கைபேசியை எடுத்து
ஹலோ சொல்கிறது.
கைபேசி வழியாக அந்த மரணவீட்டில் நுழைந்துவிட்ட எவளோ
ஒருத்தியின் குரல் மழலையின் ஹலோவை கட்டிப் பிடித்துக்
கொண்டு அழுகிறது.
பயந்துபோன குழந்தை அதன் அம்மாவின் மீது
ஒண்டிக்கொள்கிறது.
குழந்தை பயப்படுகிறாளே என்று
விம்முகிற மார்புகளுக்குள் அழுகையை புதைத்து வைக்கிறாள்
அதன் தாய்.
சுருள் சுருளான அந்த அழுகையின் வட்டங்களின் மீது
தலைவைத்து அமைதியாக உறங்கி விட்டது குழந்தை.

**கார்த்திக் திலகன்**



கனவுகள் விதைக்கப்பட்ட
விளைச்சல் நிலங்களுக்கு முன்
பாம்பாட்டிகளைப் போல வேடம் தரித்த
திருடர்கள் சிலர் கடைவிரித்துக் கொண்டிருக்கிறார்கள்

தூசு படிந்த கோணிப்பையின் முடிச்சுகளை குழுமியிருப்பவர்களின்
விழிகளில் முனைப்பொழுகும்படி அவிழ்க்கிறான் முதல் திருடன்

உங்கள் பயணங்களுக்கான பட்டுப்புழு ஒன்று
இக்கோணியில் இருக்கிறது
இமைப்பொழுதில் அது உங்களது பயணங்களை இலகுவாக்கும்
அதன் வழவழப்பான பகட்டு மேனியில் வழுக்கியபடி பயணிப்பது
பேரனுபவத்தைக் கொடுக்கும் என
முன்மொழிகிறான் இரண்டாம் திருடன்

அதன் விலை மிகச் சொற்பமானதென்றும்
உங்கள் விளைநிலங்களும் அதன் விளைச்சல்களுமே
அதன் விலை என
வணிகத்தை அடுத்த நிலைக்கு நகர்த்துகிறான் மூன்றாமவன்

உங்களது இரையளித்தலில் பசியாறினால்தான்
பட்டுப்புழுவிற்கு சிறகுகள் முளைக்கும் இல்லையெனில்
உங்கள் பயணம் கேள்விக்குறியாகும் என எச்சரிக்கிறான்
நான்காம் திருடன்

இப்போது முதல் திருடன் கோணியிலிருந்து
எடுத்த பட்டுப்புழுவை நிலத்தில் விடுகிறான்
குழுமியிருப்பவர்கள் அதைக் கொடிய நச்சுப் பாம்பென்கிறார்கள்

பாம்பு தங்களையும் தங்கள் நிலங்களையும் விழுங்குமென
அவர்கள் மன்றாடுவது கண்டு திருடர்கள் நகைக்கிறார்கள்

தன் தசைநார்களை வளைத்து நெளித்து
ஆவென வாய்பிளந்தபடி நகரும் அப்பாம்பின் எதிரில்
சேற்றில் கிழிந்த பாதங்களும்
நீருக்கு ஏங்கி விரிசலுற்ற நிலங்களும்
வெடித்த சில முலைக்காம்புகளும் இருக்கின்றன

இதை தொலைவில் நின்று நிதானமாக வேடிக்கை பார்க்கும்
கையாலாகாதவர்களின் எண்ணிக்கை கணிசமாக
உயர்ந்துகொண்டிருக்கிறது.

**அ.வால்டர் ராபின்சன்**

## மைத்துளியில் ஒளிரும் ஆயுதம்

நாசி தொட்டுமீளும் வாசனையில்~
மண்ணெரியும் நிணநாற்றம்.

காலடி நிலம் பிடுங்கும் வஞ்சனையில்~
காடுகள் பற்றியெரியும் மரண ஓலம்.

துயர்தின்று வளரும் இரவுள் நுழைய
இருளொன்றே~ சாளரம்.
மொழியொன்றே கீற்றொளி.

**ஜெயாபுதீன்**

.

தேடத்தேட நிறைந்து கொள்கிறது
வெளிச்சம்...
ஒரு ராட்சஸ சம்பங்கி பூவொன்றை
நார் நாராக கிழித்து
ஆகாசத்திலிருந்து
தலை குப்புற கவிழ்த்து
தொங்க விட்டதைப் போல
நுழைகிறது அந்த வெளிச்சம்.........

பறவைகளின் சப்தங்களில்
நிறைந்து வழிகிறது அந்த வனம்....

சொட்டு சொட்டாய்
ஏதோ ஒரு பெயர்தெரியாத மரத்தில்
ஒழுகும் கோந்து ஈரம்
என்னை அங்கும் இங்கும் நகர விடாமல்
ஒட்டி வைத்திருக்கிறது வனத்தில்......

எல்லாம் கலந்து ஒரு காற்று...
இவ்வளவு இருக்கிறது -
வனம் முழுக்க நனையும் கவிதையில்.....

இருந்தாலும்
நானும்பப்புக்குட்டியும்
மொட்டை மாடியில்
காலி ப்ளோரோசென்ட் நிற பெயின்ட் டப்பாவில்
பதியம் போட்டு துளிர்கிற
குட்டி ரோஜாமரமும் அழகுதான்...

**பொள்ளாச்சி முருகானந்தம்**



ஏன் சோகமாய் இருக்கிறாய் என்று
என்னிடம் கேட்காதீர்கள்
சோகம் என்னை ஊக்கப்படுத்துகிறது

ஏன் சோகமாய் இருக்கிறாய் என்று
என்னிடம் கேட்காதீர்கள்
சோகம் என் வாழ்க்கையை நான் மட்டுமே வாழ
சொல்லித்தருகிறது

ஏன் சோகமாய் இருக்கிறாய் என்று
என்னிடம் கேட்காதீர்கள்
சோகம் என்மீது தவறிருந்தால் கண்டிக்க சொல்கிறது
அதுவே மற்றவர் மீதானால் அலட்சியப்படுத்த சொல்கிறது
ஆக
சோகம் எனக்கு புதிய ஒன்றை எனக்குள்ளாக எப்போதும்
அறிமுகப்படுத்துகிறது...

முக்கியமாக
நான் இப்பொழுது சோகமாக இல்லை

முடிந்தால்
நான் ஏன் சோகமாக இல்லையென்று கேளுங்கள்...

ஏனென்றால்
எனக்கு எப்பொழுதும் ஆறுதல் தேவைப்படுவதில்லை
சோகம் தான் தேவைப்படுகிறது...

**இளந்தமிழன் யுவராஜா**

பயிர்களைப் போல்
மழையைக் கண்டால் தவளைகளுக்கும்
உற்சாகம் தான்
கூடவே பாம்புகளுக்கும்.!

புழுவின் முழு உடலையும் விழுங்கும் முன்
மீனுக்கு தெரிவதில்லை
தூண்டில் காரனின் துரோக வலை.!

அடர்வன கருமைக்குள்
ஊடுருவும் ஒளியின் வீச்சில்
முயலுக்கு தெரிவதில்லை
வேட்டைக்காரனின்
உயிர் குடிக்கும் துப்பாக்கி.!

கட்டை விரல்கள்
வெட்டப்பட வேண்டியவையே எனும் துரோணரின் தர்மங்களை
ஏகவலைவன்கள் அறிந்திருப்பதே இல்லை.!

**ஆதித்த கரிகாலன்**

மரம் செத்த வீட்டில்
இரண்டாம் நாள்
பூத்துச் சிரிக்கிறது பூக்கள்
செயற்கையாய்...

**சகா**

அரூப கனவொன்றின்
நடுவில் திடுக்கிட்டு விழிக்கிறேன்
வேர்த்துக் கொட்டிய
வியர்வை முத்துக்களை துடைத்தபடி
துண்டான அக்கனவின் நினைவுகளை
ஒன்றாக்க முயற்சி செய்கிறேன்
முடிந்தவரை....

சோடியம் வேப்பர் விளக்குகளின்
அதீத ஒளியில் கண்கள் கூச...

இரவின் நிசப்தத்தில் உறுமும்
வாகன இரைச்சல்களின் சத்தத்திற்கு மத்தியில்...

வயல்வெளியென நினைத்து
நெடுஞ்சாலையின் நடுவே
சலனமின்றி நடந்து போய் கொண்டிருக்கிறேன்...

ஒரு சிற்றுந்து இடிக்கிறது
விழுந்து எழுந்து முன்னிலும் வேகமாக
மீண்டும் நடக்கிறேன்...

ஒரு கனரக வாகனத்தில்
அடிபட்டு உடலின் அனைத்து துளைகளிலும்
குருதி வழிய மீண்டும் நடக்கிறேன்
ஆக்ரோஷம் குறையாமல்....

இதற்குமேல் எவ்வளவு முயன்றும்
நினைவு படுத்த முடியவில்லை....

ஆசுவாசப்படுத்திய படி தொலைக்காட்சியை பார்க்கிறேன்
"புதிதாக அமைந்த பதினாறு
வழி சாலையின் சுங்க வசூல்
வரலாறு காணாத உச்சத்தை
தொட்டிருக்கிறது - அண்மை செய்தி"

எங்கோ ஓர் மூலையில்
விரக்தி சிரிப்பு சிரித்துக்கொண்டிருந்தன
அழிக்கப்பட்ட வயல்களும் மரங்களும்.....

**பிரபுசங்கர் க**



# யாரோவின் சினேகம்

தாய்க்கு முன்பே நேசமுடன்
தொட்டுத் தூக்கிய மருத்துவர்
யாரோவின் சினேகம்!!

பனிக்குட குருதிச் சேற்றை
பக்குவமாய் கழுவிக்கலைந்த
செவிலித்தாய்
யாரோவின் சினேகம்!!

தெருவில் விளையாடுகையில்
அடிப்பட்ட குருதியை - தன்
புடவை முகப்பை
கிழித்துக் கட்டிய கிழவி
யாரோவின் சினேகம்!!

தாழ்ந்த
மரக்கிளையொன்றில்
தலையிடித்த
அடுத்த கணம்
"பார்த்துப்பா" என்று
பதறியத் துடித்த
யாரோவின் சினேகம்!!

சட்டையின்
கழுத்துப்பட்டியில்
எறும்பு ஒன்றை,
அனுமதி இல்லாமல்
தட்டிவிட்டுச் சென்ற
யாரோவின் சினேகம்!!

பேருந்து
பயணச்சீட்டுக்கு
குறைந்து போன
ஒற்றை ரூபாயை
கையில் திணித்த பூக்காரி
யாரோவின் சினேகம்!!

மழையில் நனைந்து
நடுங்கி தவித்த
கோழிக்குஞ்சொன்றை
இருக் கையிலேந்தி
கதகதப்பு மூட்டிச்சென்ற
யாரோவின் சினேகம்

இறுதியில்..
செந்தழல் மேனித்தின்கையில்
நம் உடலுடன் சேர்ந்து வேகும்
வெட்டியானின்
சினேகம் மட்டும்
முகம் தெரியாமலே
போய்விடுகிறது!!

**கவிக்குடில் சுரேஷ்**

# முதன் முதலாய்

கண்களில் தயக்கத்தின் சுமையேந்தி
சிறுபடிகள் ஏறிக்கடந்து
அந்த இயந்திரப் பறவையின்
நுழைவாயிலில் எதிர்கொண்ட
பளிச்சென்ற புன்னகையின்
கைகூப்பிய நல்வரவுக்கு
மிரண்டவாறு இருக்கையின்
எண்ணிக்கை சரிபார்த்து
அமரும் உடல்மொழியை
வைத்தே சொல்லிவிடலாம்
மகன் பெருமையாய் அனுப்பின
பயணச்சீட்டால் முதல்முறை
விமானமேறும் மூத்த குடிமகன்
நான் என்று...
முட்டை வடிவ ஜன்னலோர
இருக்கையிலிருந்து
கீழே பார்க்க எத்தனிக்கிறேன்..
மேகங்களிடை உறுமிச்செல்லும்
அந்த இயந்திரப் பறவையை
மண் வீதியோரம் நின்று
அண்ணாந்து பார்க்கிற சிறுவர்கள் கூட்டத்தில்
எங்கேயோ நானும் தெரியலாம்...

**ஜி ராஜன்**



## நீளுலகே நிர்வாணம்

ஆடுமாடு நிர்வாணம்
அசையும்மரம் நிர்வாணம்,
பாடும்குயில் தேடுகின்ற
பச்சைக்கிளி நிர்வாணம்.

ஆடும்மயில் நிர்வாணம்
அல்லிமலர் நிர்வாணம்,
காடுமலை கடந்திங்கு
காசுபணம் நிர்வாணம்.

காற்றுகூட நிர்வாணம்
கடலலையும் நிர்வாணம்,
ஊற்றுநீரும் உண்மையிலே
உரைக்கும்மொழி நிர்வாணம்.

காய்கனியும் நிர்வாணம்
கதிரவனும் நிர்வாணம்,
நாய்நரியும் மின்னுகின்ற
நட்சத்திரம் நிர்வாணம்.

புல்பூண்டும் நிர்வாணம்
பூக்கும்மலர் நிர்வாணம்,
கல்ஒடு காணுகின்ற
கண்ணின்மணி நிர்வாணம்.

ஓடும்நதி நிர்வாணம்
உனைஈன்றது நிர்வாணம்,
ஆடைக்குள் இருக்கின்ற
அனைவருமே நிர்வாணம்.

**அ.முத்துசாமி**

## நகராத ஒரு கணம்

ஞாபகங்களின் காவலர்கள்
சட்டச் சிறைக்குள்ளே

மங்கிய மலர்ச்சியை
மறுக்காமல் சொல்கிறது
பழைய புகைப்படங்கள்

வாசம் மறந்துபோனது
சிரிப்புகள்
சிறைபட்டுப் போனது

நகராத ஒரு கணம்
நாட்களை நகர்த்துகிறது

வண்ணப் பூக்கள்
வாடாத தோட்டம்

ஒடுக்கப்பட்ட கருப்பு வெள்ளையில்
ஒளிந்து கிடக்கிறது வண்ணம்

**மீ.மணிகண்டன் (மணிமீ)**

உலர்ந்த ஆற்றில்
வெம்மைகளிலிருந்து
மீன்தொட்டிகளில்
புலம்பெயர்ந்த
கூழாங்கற்கள்
வரம் பெற்றவைகள்

தங்க மீன்களின் முத்தத்தில்
நனையும் கூழாங்கற்கள்..
மீன்முட்டைகளின் கனவுகளை
கரைத்துக் கொண்டிருந்தன.

சிறு மீன்தொட்டிக்குள்
அழிந்துப் போன
ஆற்றின் நினைவுகளை
சுமக்க பழகி இருந்தது வீடு..

கண்ணாடித் தொட்டிக்குள்
இருந்து..
கல்லெறிகின்றன மீன்கள்..
நொறுங்கி விழுகின்றன
மணல்வீடுகளை பற்றிய
நினைவுகள்.

மீன்பிடித்தாடிய
அப்பத்தாவின் முந்தானை வண்ணத்தை
எந்த மீனின் தோலில்
தேடிக்காண்பது?

**சிந்தா**



யாரோ என்னிடம்
தன் முறிந்து போன காதலொன்றுக்காக
அழுது புலம்புகிறார்கள்..

யாரோ என்னிடம்
விடைபெறுதலுக்கான கடைசி வார்த்தையொன்றை உதிர்த்து
விடுமாறு
யாசித்து கேட்கிறார்கள்..

யாரோ என்னிடம்
பாதி வழியில் விட்டு வந்த உறவொன்றுக்காய்
வருத்தப்படுகிறார்கள்..

யாரோ என்னிடம்
தன் அவமானத்தின் காயங்களை திறந்து காட்டி
தலை குனிகிறார்கள்..

யாரோ என்னிடம்
இதயக்கதவுகளை திறக்கும் கலையை கற்றுத்தருமாறு
இறைஞ்சி நிற்கிறார்கள்..

யாரோ என்னிடம்
வெளிப்படுத்தப்படாத ஒரு நேசத்திற்காய்
சஞ்சலப்படுகிறார்கள்..

யாரோ என்னிடம்
கேட்கத்தவறிய மன்னிப்பிற்காய்
மனம் உடைகிறார்கள்..

எப்போதும்
எவரோ ஒருவர்
எதன் பொருட்டோ
என் எதிரே நிற்கிறார்..

இழுத்து மூடிய திரைகளுக்குப்பின்னால்
நானோ
வெறும் ஓசையாய் நிறைந்திருக்கிறேன்!!!

**ரிஸ்கா முக்தார்**

# முடிவுற்றபின்

அன்று இரவு கொஞ்சம் தாமதித்து வலம் வருகிறது
நாய்கள் ஜாக்கிரதை
வாசல் கதவுகள் தீட்டப்பட்டு இருக்கின்றன
இரவு நேரங்களில் வெள்ளை உருவங்கள்
தெட்ட தெளிவாக உருக்கொள்கிறது
காட்டான் குருவிகளின் சத்தங்கள்
மெல்ல மெல்ல காதுகளை
அடைத்து கொள்கின்றன
இரண்டு உருவங்கள் நகர்ந்து
அந்த கதவருகில்
இறந்த உடல்களை புரட்டி புரட்டி
இவர்கள் யார் என்று தேடுகின்றது.

**தென்னவன்**

சரியாய் பத்தாவது கடுதாசியில் பெரியத்தையிடம்
இங்கிருந்தே சரன்டர் ஆனார் அப்பா;
பதினொன்று பனிரெண்டாவதில்
பரஸ்பரம் பழம் விட்டுக்கொண்டனர்;
பதிமூன்றாம் கடிதத்தில்
அத்தையின் பரம வைரி அம்மாவுக்கெதிராய்
கொம்பு சீவும் படலம் ஆரம்பமாகியது;
பதினாலு பதினைந்தில் அம்மா அடங்க மறுத்த
தன் தரப்பு காழ்ப்புகளை
அழுத்தி எழுதியிருந்தாள் அத்தை;
பதினாறு பதினேழுகளில்
தன் கிரகஸ்த கடமைகளை
பட்டியலிட்டார் அப்பா;
பதினெட்டில் அத்தை வேதாளம்
மீண்டும் முருங்கை ஏறியது;
பதிலுக்கு அப்பா வேதாளமும்
அடுத்த சில கடுதாசிகளுக்குள்
தம்பி அம்மா வயிற்றில் வளரலானான்;
இதுவரை நூறு கடிதங்கள்
எழுதியிருப்பாள் அத்தை,
அப்பாவும் வழக்கம்போல
பதில் தர்க்கத்தால்
அம்மாவை காபந்து பண்ணினார்
இடைப்பட்ட காலங்களில்தான்
அவசர அவசரமாய்
எங்கள் ஐவரை பெற்றுப்போட்டு
தன்னிருப்பை ஸ்திரப்படுத்திக்கொண்டாள் அம்மா...

**கோ. ஸ்ரீதரன்**



# இமயம் உன்றன் கைகளுக்குள்

மேடு பள்ளம் இருக்குமையா!--நாம்
விழியைத் திறந்து நடந்திடுவோம்!
காடும் இடையே குறுக்கிடுமே!--அதைக்
கடக்க அஞ்சி ஒதுங்குவதா?

ஆடும் மாடும் ஒற்றுமையாய்--என்ன
அழகாய் நடக்கக் காணுகிறோம்!
தேடும் முடிவை அடைவதற்குள்--நம்
சிந்தை ஏன்தான் சிதைகிறதோ?

எளியோர் சிறியோர் எல்லோரும்--நம்மை
ஏற்க நாமும் இடங்கொடுப்போம்!
தெளிவே இல்லா மனிதர்களும்--நம்மைத்
தேடி வந்தால் ஆதரிப்போம்!

வேலி வளரும் செடிகொடிகள்--ஒன்றி
விளைச்ச லுக்கே உதவுதுபார்!
நாலும் அறிந்த மனிதஇனம்--ஏன்
நலிந்த எண்ணம் வளர்க்கிறது?

உயர்வும் தாழ்வும் நமக்குள்ளே--இனி
உதவா தையா உதவாது!
அயலான் உன்னை வெறுத்திடலாம்--உன்
அண்ணன் தம்பி பகைப்பதுவோ?

தமிழர்க் குள்ளே வேற்றுமையை--நாம்
தள்ளி வைத்தல் வேண்டுமையா!
இமயம் உன்றன் கைகளுக்குள்--பார்
இருக்கும் நாளை கட்டாயம்!

**வங்கனூர் அ .மோகனன்**

இப்போதெல்லாம் கயிறொன்று தெரிகிறது
கண்ணுக்குப் புலப்படாமல்

கரைகளறுக்கும் காட்டாறைக்கூட
கரைதாண்டவிடாமல் கைகட்ட வைக்கிறது
கட்டிப்போடாமல்

ஊடறுத்து உயரும்
உட்கழிவுகளையெல்லாம்
உள்நுழைவாயிலேயே போடுகிறது
உடைத்து உருத்தெரியாமல்

இக்கயிறொன்றின் பெயர் தேடித்தேடித் தோல்விதான்

இருந்தும்
என் நதியின் எல்லா நீரும்
முகம் காட்டும் கண்ணாடி
அசுத்தப்படுத்தாதீர்கள் எச்சரிக்கை இல்லாமலே
புரிகிறது எல்லோருக்கும்

**ரா.ராஜசேகர்**

# நினைவுகள் ஓர் கிணைப்பறை

கால்களால் நினைவின்
கனவிலியை முன்னும் பின்னுமாய் அழுத்தி
இயக்கியபடி இருக்க
கண்களின் சாணைக்கல்லில்
தீப்பொறி பறந்தபடி...

காளான் குடையின் கீழ்
நமுத்துப்போகாதெனும் நம்பிக்கையில்
நினைவுகள் நிறுத்தப்பட்டிருந்தது

பச்சைமண் பாண்டத்து
நீரென ஒழுகும் நினைவுகளை
பதமாகச் சுட வேண்டும்

கையுறையாய் அளித்தநினைவுகள்
காற்றில் பறந்து மலை முழைஞ்சுகளில்
மிழற்றியபடி மிதக்கிறது

இவ்விரவின் தனிமையில்
இதயத்தின் கிணைப்பறையான
நினைவுகளை
நகர்வலத்து இறைவியின்
மெட்டியொலியில்
மெல்லல்ல நிறுத்தி!

**லதா நாகராஜன்**



# பிச்சைப் பாத்திரம்

தூக்கத்திற்கு தூண்டில் போடுகின்றன விழிகள்
மனம் இந்த இரவை மட்டும் கடந்துவிட்டால் போதும் என்கிறது
வழக்கத்திற்கு மாறுதலாய் நிசப்தமாய் இருக்கிறது வானம்
மௌனம் கடவுளின் மொழியாக இருக்கக்கூடும்
இந்த உலகத்தின் வேகத்திற்கு
என்னால் ஈடுகொடுக்க முடியவில்லை
மெய்யியலைத் தேடுபவர்கள்
உங்களுக்கு பைத்தியமாகத்தான் தெரிவார்கள்
இந்தப் பூமிக்கு யாரும் முக்கியஸ்தர்கள் இல்லை
மரணஅலைகள் ஒவ்வொரு நாளும் கொண்டுபோயக்
கொண்டிருக்கிறது உயிர்களை
இந்த உலகத்தின் வேர்களை அறிந்து கொள்வதென்பது
அவ்வளவு எளிதானதல்ல
பிறப்பு, இறப்பு இரண்டிலொன்றை தேர்வு செய்யவேண்டிய
இக்கட்டான நிலை எனக்கு
இந்த உலகம் இரவுப்பொழுதை சாத்தானுக்கு ஒப்புக்
கொடுத்துவிட்டது
மரணப்பறவை எனக்கான செய்தியை எப்போது கொண்டுவரும்
வாழ்க்கை என்னவென்று புரியாமலேயே இவ்வளவு
காலங்கள் ஓடிவிட்டன
எனது மரணத்தாகத்தைத் தணிக்க பெருங்கடல் போதாது
பால்வேற்றுமையிலிருந்தும், தோல் விவகாரத்திலிருந்தும்
இந்தப் பிறவிலாவது விடுபட்டுவிட முடியுமா
இந்தப் பாவிக்கு பின்னாலிருப்பது மரணத்தின் காலடிகள் தானே
மரணதேவதை என்னுடன் விளையாடுகிறது
கடவுளை அடைவதற்கு உன்னதமான வழி
தற்கொலை தான் என்று சொல்லிச் சிரிக்கிறது
இந்த இரவுப்பொழுது நான் சபிக்கப்பட்டவன் என்பதை
உறுதிப்படுத்துகிறது
பாவத்தின் சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள நான் தயாராய்
இருக்கிறேன்
துயரப்படுக்கையில் எவ்வளவு நாள் காலங்கழிப்பது
கடவுள் செய்யும் சித்ரவதைகளுக்கு
மரணம் முடிவுகட்டிவிடும் அல்லவா?

**ப.மதியழகன்**

கடலோரப்பகுதியிலிருக்கும்
என் அலுவலகப்பணியினூடே
சிறுநீர் வேளை கடந்த
மாலைவேளைகளில்..
ஜெயம்அண்ணன்
மிதிவண்டியில் கொண்டுவரும்
தேநீரை உறிஞ்சும் வேளைகளில்..
சாளரத்திற்கு வெளியே
வாகைமரத்தொன்றின் கிளைகளில்
வாகாய் வந்தமரும்
அந்த இரட்டைவால் கருங்குருவி
நெய்தல்நிலக் கருப்பொருளில்லையே..
என
அசைபோடும் கேள்விகள்
அனுதினமும் மனதின்
அடியாழத்தில்..

**ஜா.ஜோசப்**

# பனிப்பு

விலகமனமின்றியே
பனிசூழ்ந்த வைகறைகளைக் கறைக்கண்கள்
இறுக்கமாகப் போர்த்தியுள்ளன

இருளின் இறுதிச்சாமங்களில்
ஒவ்வொன்றாய்
உதிரும் வேப்பம்பூக்கள்
குவிகின்றன

விண்மீன்கள் உருமாறிய
கருநீலமாணிக்கங்கள்

மென்மேலும்
இருளாகிப் போகின்றது
கறைமனம் கழுவிய வானம்

வான்ஏவிய முறையீடுகள்
மூளும் உடுப்போர்
காத்திருக்கின்றன கைகள்

எதையும் கணமேனும் நின்று
சிந்திக்காமல்
நிந்தித்த பாவத்தின்
புலால்வாசம்
சந்தனக்காடுகளால்
கலைகின்றது

துருப்பிடித்த ஆன்மாக்கள்
மண்டியிட்டுச் சரணடைந்த
பிறை நாட்களின் மணம்
உளம் ததும்பி வழிய
நிலா உருகி மறைகின்றது

**மின்ஹா**



# பிரக்ஞைகளின் வன்புணர்வு

ஆள் உறக்கத்தின் துகின இரவில்
துகில் கலைத்து
வன்புணர்வு செய்யப்படுகிறது
மறக்கவோ மறைக்கவோ
முடியாத பிரக்ஞைகளின்
மெல்லிய உடல்..

நான் கதறுகிறேன் கத்துகிறேன்
கையெடுத்து கும்பிடுகிறேன்
ஆனாலும் புணர்கிறது..

நான் துடிக்கிறேன் தவிக்கிறேன்
தலையிடித்து பதைப் பதைக்கிறேன்
ஆனாலும் புணர்கிறது..

நான் அழுகிறேன் அனத்துகிறேன்
கழுத்திருகி வதைகிறேன்
ஆனாலும் புணர்கிறது..

தாளவியலாத வன் துயர்களை
இரவும் புணர்கிறது
வன்மையாக புணர்கிறது

வன் புணர்விற்கு பின்னான கணங்களில் குருதிக்கும்
சுக்கிலத்திற்கும் பதிலாக கண்ணீர் கசிகிறது..

கசிகிற கண்ணீர் தூறல்களை
தலையணை மட்டுமே துடைத்து விட்டு
துணையாக எனை தூங்கவிடுகிறது..

இருந்தாலும் பயம் நாளைய வன் புணர்விற்கான நீட்சி எங்கனம்
இருக்குமோ நானறியேன்..?

**சிவபெருமாள் கிருஷ்ணன்**

முன்னொருநாள்
உங்கள் சிரம்தொட்டு
இருகரங்களால்
ஆசிர்வாதம் தருகையில்
நீங்கள் மகிழ்ந்து லயித்த
அதே கிழவனைத்தான்
பின்னொரு நாள்
நீங்கள் பித்ருவென
பெயரிட்டு அழைக்கையில்
காகரூபத்தில் வந்துங்கள்
சிரம்தொட்டு போனதிற்கு
அபசகுனமென்று பாலூற்றி
அலசுகிறீர்கள்....

**க. அய்யப்பன்**

# குழந்தை பொம்மை

போனமுறைபோல்
பிள்ளைகளுக்கான
விளையாட்டுப் பொருட்களுடன்
திரும்பிவிடுவேனென
இம்முறை போன தினக்கூலி
வீடு திரும்பாததால்
தெருவுக்கு வந்தது
கூலி இல்லாத தினம்

அப்போதிருந்தே பொய்த்த வானம்
இன்று
பொழிந்துகொண்டிருந்தது
அவளது கண்களில்.....,

ஊரின் கழிவிரக்கத்தில்
உதிக்கும் வைகறை
அன்றாட யாசகத்தில் சமைபடுகிறது இப்பொழுது

இருந்தும்
சாலை கடக்கையில்
பொம்மைக்கடைக்கு இழுத்துச்செல்லும்
குழந்தையை அழுதபடி பார்க்கும்
தாய்க்கு எண்ணத் தோன்றுகிறது தானும் ஒரு பொம்மையாய்
பிறந்திருக்கலாமென்று!



**ரோஷான் ஏ.ஜிப்ரி**

காலணாவுக்கு வெத்தல வாங்கனாலும்
சோம்பு சீரகம் அம்பது காசுக்குனாலும் அவசரக் கைமாத்துனாலும்
முச்சந்தி கடைதான் எங்களுக்கு....

ஒசி சுண்ணாம்பு கிழவிக்கு
வெத்தல காம்பு எனக்குனு
பிரிச்சே பழகிட்டோம்...
உறவுக்காரவுக வந்தா அம்மா வெரட்டும்
அஞ்சர பெட்டி சாமான்கள்
அப்படியும் நிரம்பாது
இனாம தந்த கருப்பட்டில
வீட்டோட வறுமை கசக்காது......

கஞ்சிய ஊத்தி வச்சுட்டுதான்
ஊறுகா வாங்க சொல்லும் அக்கா
பத்து காசு ஊறுகாய்க்கு
பத்து காச அனாமத்தா கொடுத்தாதான்
ஐயாவோட தேர் நகரும்
கஞ்சி பானையும் குறையும்.....

மனுச பட்டினினாலும்
மாடுக பட்டினினாலும்
மொத்த தீவனம் அங்கதான்
திட்டுனாலும் இல்லைனு சொல்லாம
காவாசி பையையாவது நிரப்பி அனுப்புவாறு
இப்ப நாங்க கொஞ்சம் நிமிர்ந்து நடக்கில
கூனல தூக்கி அலையிறாறு....

வாழ்ந்த இடங்க அடையாளம் மாறி போனாலும்
வாழ்ந்த காலங்கள் அப்படியதோன் கெடக்குது
இத உணர முடியாமதான்
நாங்களும் மனுசனு பல அலையிது........

**மஹா பர்வீன்**

நிறைந்த பகல்வெளியில்
வெற்றி ஒன்றே குறி நமக்கு....

உயரங்களை தாண்டும் நெஞ்சுரத்துடன்
பாதம் மீதேறிய பாதையில்...

உனக்கான துதி பாடலை
நான்தான் இசைக்க வேண்டும் என அடம் பிடிக்கிறேன்...

நீ பல்லக்கில் பவனிவரும்
வேளையில் நான் மட்டுமே
சுமக்க வேண்டுமென்பது என் ஆவலாகிறது....

எப்போதும் நீ தேரில் வர
கீழே வடம்பிடித்து இழுத்து
வர என்னை அழைக்கிறேன்...

பருகிய நாட்களில் வசந்தம்
இமைக்கும் நேரத்தில் இதயத்தில் குயில்...
இதைவிட வேறென்ன வேண்டும் உனக்கு???

**தனலட்சுமி தர்மராஜ்**

புதைமணல் பகுதியின் கவனத்துடன்
அடி வைக்க வேண்டியிருந்தது
வித விதமான அளவுகளில் ஏராளமான நத்தைகள்
ஈர மண்ணை உழுது செல்லும் பாதையில்.
புத்தனின் அமைதியுடன்
கிளையொன்றில் சிலையென
அமர்ந்திருந்தது பனங்காடை.
கூக்கூகூக்கூவென கூவிக் கொண்டிருந்தது
அத்திமரத்தினுள் புதைந்திருந்த
ஆண் குயிலொன்று.
வயலட் நிற மலரொன்றின் இதழ்களில்
முத்துக்களாய் உறைந்திருந்தது’
நேற்றைய இரவின் மழைத்துளி.
கூடற்ற நத்தையாய் அடர் கருப்பில் நீர்த்தாரையிட்டபடி
நகர்ந்து செல்லும் உயிரினத்தின் பெயரை
செந்தில் அறிந்திருக்கக்கூடும்.
கனத்த திரையென ஈர மேகங்கள் அலைய
இதமான குளிர் காற்றில் நடுங்குகிறது உடல்.
மனித சஞ்சாரமற்ற ஆழ்வனமொன்றின்
நீர்நிலையென நிச்சலனமாயிருக்கிறது மனது.

**ஜி.சிவக்குமார்**



தேகஜீவிதம் உயிர்மை பொருள்படின்
உன் கயல் விழி குளத்தில்
இறந்து மிதக்கும் மீசைக்கெளுத்தி நான்

**அகோரன்**

# வலி

கண்கள் பேசும் மௌனமொழி
தூரிகையின் நிறப்பிரிக்கையால்
பதிவு செய்யப்படும் வலியின் ஓவியம்!

உணரப்படா ஏக்கங்களின் வலிகள்
பிரபஞ்சத்தின் நிரந்தர ஆவிகள்!
ஏக்கமுணர்ந்த மௌனங்கள்
சாத்தான்களின் பிரபஞ்சம்!!

கண்ணிமைக்கும் கணத்தின் இருள்
உணர்த்தும் உண்மை பேச
இமைகள் செயலிழந்து சாட்சியமாகும்!

வலிகள் சுமையிழக்கும்
ஓசையின்றி அறுந்தோடும்
கண்ணீர் முத்துக்களினூடாய்...

வலி சுமையாக கதிக்கும்
வெளிச்செல்லும் வாயில்கள்
தேடியலைந்து சோர்வுடன் ஓய்வாகையில்...

வலி தோற்றுவிடும் காலச்சக்கரம்
சுழலும் போது..
வலி தோற்கடிக்கும் ஞாபகமறதி
தொலைக்கும் போது...

வலி வழிகாட்டும் சவாலாயேற்று
முந்நகரும் போது..
வலி கொன்றுவிடும்
எதிரி கோழையென்றறியும் போது...

**அப்துல் ரஷாக்**

மௌனக்கூட்டுக்குள்
பதுங்கியிருக்கும்
என்னிடம் பேசா
உன் வார்த்தையொன்றின்
மீதேறி..
உன்னிடம் பேசா
என் வார்த்தையொன்று...
அடைகாத்துக் கொண்டிருக்கிறது..
கூடலின் விரல்கள் தொட்டு
ஊடல் உடையக் காத்திருக்கும்..
அக்கணத்தில்..
வெடித்து வெளியேறப்போகுமந்த
புன்னகையினூடே..
அவிழும் ஆனந்த கண்ணீர் துடைத்து..
ஆதுரமாய் தோள் சாய காத்திருக்கிறேன்..
நானும் உன்னைப்போலவே..!

**ம.செல்வகணேஷ்**

# என்னை கவனியுங்கள்

நான் ஒரு பைத்தியமென
என் மீது சொற்கற்களை எறிகின்றீர்..!

நான் ஒரு முட்டாளென
என்னை முட்களால்
அலங்கரிக்கின்றீர்..!

நான் ஒரு துரோகியென
என்னை துரத்தியடிக்கின்றீர்..!

சுயத்தை தொலைத்த என்னைத்தான்
சுயநலவாதியென்கின்றீர்..!

கொஞ்சம் நிதானமாக
கவனியுங்கள் என்னை..
நான் உங்களின் மனக்கண்ணாடி..!

**நிவேதா சுப்பிரமணியம்**



பூனை குட்டிப் போட்டது
அக்குட்டிகளின் பசி தீர்க்க
எலியும் குட்டிப்போட்டது.

**மெய்யன் நடராஜ்**

அவள் இறந்திருக்க வேண்டாம்
அவள் கடிகாரம் நின்றிருக்க வேண்டாம்
இறப்பின் தேதி குறிக்கப்பட்டே
பிறந்தாளோ
இறப்பின் அர்த்தம் தெரியும் முன்பே
உலகின் இருப்பில் அவளுக்குத்தான்
எத்தனைப் பிரியம்
அழகிய மொட்டின் முற்றெனவே
காலன் தந்தான் முளைப்புற்றை
இருப்பினும்
அவள் உயிர் பறிக்கத்தான்
எத்தனைச் சூழ்ச்சி
உயிர் பற்றச்
செல்லும் போதெல்லாம்
'நாட் டுடே' என்ற
மழலையிலேயே வழியனுப்பினால்
செய்வதறியா காலன்
கீமோவில் குரல் நெரித்தான்
பின் அழகிய செவி கெடுத்தான்
கண்ணொளி பறித்தான்
இறுதி நொடியினில்
விரும்பிப் பார்க்கும் ஹாரிபாட்டர்
அவளின்றி ஓட
தாய் தந்தை மடியிலிருந்து
அவள் சற்றும் அறிந்திடா நிலையில்
தந்திரக்கார காலன்
அணைத்தே சென்றான்
அவள் உயிரைப் பறித்தேச் சென்றான்
எனினும்
அவள் இறந்திருக்க வேண்டாம்
அவள் கடிகாரம் நின்றிருக்க வேண்டாம்.

**மு.முகமது ஃபாரூக்**

பேரிறைச்சல் எழுப்ப முயலா அலை..
சிறு புல்லசைவுக்கும் வழியில்லா காற்று..
எப்போதும் போல ராட்சதனாய்
மண்டிக்கிடக்கும் இரவு...
நகர்வற்று நிலைகொண்ட
நீளக் கருநீலமேகம்..
நிலாவில் கொஞ்சமாய்
மிஞ்சியிருக்கும் ஒளி..
நூற்றாண்டு கடந்த முதிர்கிழவன்
கைத்தடித் துணையோடு
கொஞ்சமாய் அசைவதாய்
அசைந்தும் அசையாக் கிளை இலைகள்..

அந்தத் திருநாள் நினைவைவிட
அழகாய் கழியும் இன்னுமோர் இரவுக்கு
என் கனவுகளின் விரல்பிடித்து
கொஞ்சம் உயிரூட்டி நீலும்
உன் முத்தமும்
ஒற்றைக் கையில் அணைத்துக்கொண்ட
சின்னதொரு மெழுகுவர்த்தியும்..

**செந்தீஸ்வரன் சிவன்**

# வாழ்வின் போக்கு

என்னை நான் அழைத்துக் கொண்டு
ஒரு பாலைவனத்தில் அமர்கிறேன்
ஒரு சின்ன எறும்பாய்
ஊர்ந்து நகர்கிறது பாலைவனம்
பின்
ஒரு மலைப் பாம்பு, ஒரு முதலை
இப்படியாக வளரத் தொடங்குகிறது
வாழ்வின் போக்கு அங்கிருந்து வெளியேறி
நிலவொன்றைத் திறந்து
அங்கு அமர்கிறேன்
நிலவில் நெல் குத்தும்
மூதாட்டி செத்துக் கிடக்கிறாள்
சிறுகச் சிறுக உலகின்
ஆதி உடல் அழிந்து கொண்டிருப்பதை
என் ஆழ்மனதின் பெருமூச்சு
எனக்குச் சொல்லித் தருகிறது
உங்கள் காதுகளுக்கும் அவைகளின் ஒலி கேட்கலாம்.

**ஏ.நஸ்புள்ளாஹ்**



காலணி அணியாத பாதங்கள்
கரடுமுரடாக இருக்கிறது
வாழ்க்கை பயணம்

**சாண்டில்யன் விவேகானந்தன்**

# ஒரு மழை நாளில் தொலைந்த முதியவரின் டைரிக் குறிப்பிலிருந்து

தொலைந்த அன்று அணிந்திருந்த
மேல் சட்டை கால் சட்டை வண்ணங்களை
அடையாளமாய் தராதீர்கள்!
உறவுகளை துறந்தவனுக்கு உடைகள் ஒரு பொருட்டல்ல...

என் கழுத்தோர மச்சமும்
முழங்கை வெட்டும்
அங்க அடையாளங்கள் என்று
முழக்கமிடாதீர்கள்!
அத்தனை நெருக்கமாய் என்னைப் பார்க்க
யாரையும் அனுமதிப்பதில்லை நான்...

சற்று மனநிலை சரி இல்லாதவர்
என்பதை தவறாது குறிப்பிடுங்கள்.
அதுதான் நான் மனிதன் என்பதை உறுதிப்படுத்தும்!

கடைசியாய் கொல்லைப்புறத்தில்
என் மனைவிடம் கேட்டு
என் அந்தரங்க பெயர் சொல்லி அழைக்கச் சொல்லுங்கள்

கொன்றே புதைத்திருந்தாலும்
உரித்தெழுவேன் அவளுக்காய்...

ஆனால் எப்படி சொல்வேன்,
அவளைத் தேடிதான்
நானும் தொலைந்திருக்கிறேன் என்பதை..

**அ.க .இராஜாராமன்**

செறிவூட்டப்பட்ட இக்காரிருளில்
நேற்றைய பொழுதில் மிகச்
சாமர்த்தியமாக நிகழ்த்தப்பட்ட தண்டனையெனும் தர்ம கட்டிலில்

சிரிப்பை காட்டியவாறே மெல்ல மெல்ல விழிகளைக் கீறிய
துரோகமெனும் முட்படுக்கையின் மீது

பதற்றமேதுமின்றி முதுகின் நடுப்புறத்தை குத்திக்
கிழித்த கத்திகளின் குருதிக்கறை தடவிய போர்வையினுள்

நாளையப் பொழுது வஞ்சகத்தின் ஆலோசனைகளை அள்ளி
நிறைத்த தலையணைக் கொண்டு

நீட்டி நிமிர்ந்து அயர சொப்பனத்தில் துன்புற்றவனின் ரணக்கதறல்
உலுக்கிச் செல்ல பறிபோனதென் உறக்கமென

வெட்டியெறிந்து விட கட்டளையிட்டு அனுப்பிய
கயவனின் கைக்கூலியான என்னால் துண்டாக்கப்பட்டது
கதறியவனின் நாக்கு.

**ரா.த. ஜீவித்தா**

# பதின் பருவ குழந்தை

அந்த வீட்டு வாசல் படியில்
அவன் அவ்வப்போது
அமர்ந்திருந்தான்
வாயில் ஒழுகும் எச்சிலுடன்...

சூம்பியிருக்கும் கால்துடிப்புகளில்
நகர பிரயத்தனிக்கும்
ஒரு வாழ்வின் ஆதங்கம்
விடைகாண இயலா
வினாக்குறிகளின் வடிவில்
விடைத்திருக்கும் கைகள்
விரிந்து சுருங்கும் விழிகளில்
விழுங்க இயலா ஏக்கங்கள்

சகவயது சாதாரணங்கள்
சாகசமாய் அச்சுறுத்த
மனமெங்கும்
மறுக்கப்படுகிற வாழ்க்கையின்
சாகா ரணங்கள்
வரையப்படாத ஒரு
வாசலின் எல்லைக்கோட்டில்
கடுஞ்சொற்களால்
கட்டப்பட்டிருந்தான் அவன்

எப்போதாவது சத்தமிட்டதை தவிர அவன் எதுவும் பேசியதில்லை
நேரில் காணும் நேரத்தில் புருவங்களை உயர்த்தி
புன்னகைத்திருக்கிறான்
கடந்து செல்வோரின் உணர்வுகள் யாவும்
அன்னியமின்றியே அவனுள் கலக்கும்

அவனுள் அவ்வப்போது நிகழும் சிலிர்ப்பில்
வெளிப்படுவது
ஆனந்தமோ சோகமோ
உள்ளுறையும் ஏக்கங்களை
வார்த்தைகள் ஏதுமின்றி வடித்துவிடும்
அவனின் பார்வைகளில் சிக்கி மீளும்
என் கையாலாகத கரிசனங்கள்

பிறழ் மணம் கொண்டவன் என
பிழையாக எவரேனும் நோக்கலாம்
வாழ்வில் பிழையேதும் செய்திடா மழலையைப்போல்
கள்ளமில்லா மனம் கொண்ட
கடவுளின் குழந்தை அவன்

எதிர் வீட்டுப் பையனின்
வண்ணப் பந்தொன்று
வீதியில் விழுந்து விழுந்து
எழும்புகையிலும்
பிடித்து விளையாடுகிற பிள்ளைகளின்
கால்களை பார்க்கையிலும்
அவனுக்குள்
ஆயிரம் பந்துகள்
எழும்பி எழும்பி அடங்கும்.

**நிலாரவி**

# மௌனக் கூடு

அதுவொன்றும் சுயம்புவாய்
முளைத்த மௌனமல்ல
விரும்பியும் விரும்பாமலும்
நாமிட்ட விதைகளில்
உறவின் வெளியெங்கும்
விளைந்து படர்ந்திருப்பதுதான்

கனத்து நிற்கும்
மௌனத்தின் இடையே
சொற்களை விழுங்கிக்கொண்டே
ஒரு வழிப்பாதைகளில்
பயணித்திருக்கின்றோம்

மௌனத்தின் பிரகாசத்தில் கண்கூசியும்
வெம்மையில் வாடியும்
இருளில் தடுமாறியும்
இறுக்கத்தில் குழைந்தும்
கடந்துகொண்டிருந்த கணத்தில்
அந்த மௌனத்தின் ஓட்டில்
அத்தனை விசையாய்
தட்டியிருக்க வேண்டாம்

இப்போது விரிசல் விடும்
ஓட்டிலிருந்து எது வந்தால்
உனக்கும் எனக்கும் உகந்தாக இருக்கும்!?

**ஈரோடு கதிர்**



.

தேகச் சுமை ஒருபுறம்
பார்வைச் சுமை மறுபுறம்
விந்துச் சுவைகளுக்கு
மட்டுமிங்கே சுவை?

உறை குருதியில் ஈக்கள் பல மொய்க்க
உணர்வற்ற செவிப்பறை
என்ன சொல்லி கதறியதோ??

கதறினாலும் கேளாது
ஊர் செவிப்பறையெங்கும்
இங்கே பலமாகவும், பலவீனமாகவும்
ஏதோவொரு திசைதிருப்பி
மறதியினால் மலடாகி கிடக்கிறது!!

அனிச்சை செயலாகிப் போன
குருதித் தூரலில் நனைகிறதென்னவோ
குருத்துகளே?

ஒவ்வொரு
நிர்பயாக்களுக்கும்
ஹாசினிகளுக்கும்
ஆசிஃபாக்களுக்கும்
கொதித்தடங்கும்
வக்கத்தவனாகவே
இம்முறையும்?

தளிர்களை
கிள்ளியெறியும் கயவர்களை
.....அடித்தால்தானென்ன?
.....அறுத்தெறிந்தால்தானென்ன?

**விஜி**

மஞ்சளை அரைத்துத்தரும்
என்மேல் அரைத்த மஞ்சள் பூசி
அருந்ததி பார்ப்பார்கள்..

கைக்கு வலிமையோடு
காரம் மணம் குணத்தையும்
குறையாமல் கொடுத்த என்னை ஒதுக்கி
கைவலிக்காமல் இயந்திரத்தில் அரைக்கிறார்கள்..

அம்மா மடியில் குழந்தை போல இருந்ததால்
அம்மா குழவி எனச்சொல்லி..
அது மருவி அம்மிக் குழவி ஆன நான்..

பள்ளிக்கு செல்லும் பிள்ளை போன்றோ..
பணிக்கு செல்லும் அன்னை போன்றோ..
பிரிந்ததில்லை..

உபயோகத்தில் இருந்தாலும்
ஓரமாய்க் கிடந்தாலும்
அம்மா குழவிதான் நாங்கள்..
நீங்கள் வேண்டுமானால்
அம்மிக்குழவி என அழைத்துக்கொள்ளுங்கள்..

**சிவ. கருணாநிதி**

விருப்பங்களுக்கும்
விலகியிருத்தலுக்குமான இடைவெளியினை எவ்வார்த்தைகளால்
விளிப்பது

பிம்பங்களின் சாயல் கொண்டு தீர்மானித்தலில் எத்தனை நியாயம்
இருந்துவிடக்கூடும்

இருள் படர்ந்த கானகம்
திசை தவறிய பாதைகள்
ரகசியமாய் சேமித்த வார்த்தைகள்
மறைத்து வைக்கப்பட்ட அன்பு
மறுதலிக்கப்பட்ட. நேசம்
உறுத்தியபடிக் கிடக்கும் பொய்கள்
வலிபொருந்திய நிராகரிப்பு

நீளும் பட்டியல்களுக்கிடையே
இக்கணம் உள்ளோடும் நடுக்கம்
ஆண்டாண்டு காலமாய் சேர்த்து வைத்த
விலக இயலாத ஒரு பிரியம்

அலைவதும் தொலைவதுமான அலைக்கழிப்பினிடையே
சுயதீர்மானங்களில் ஏதுமில்லை
ஒளியின் திசைக்கேற்ப உருமாறும்
பிம்பங்கள் வெறும் பிம்பங்கள்தான்
அவை பிரதிகளல்ல

நிஜங்கள் வேறாகவும் இருக்கக்கூடும்...

**ஜானு இந்து**



# இறைவா

ஒவ்வொரு விடியலிலும்
உடல்வலி மிச்சமிருக்க,
அழுது தீர்த்த விழிகள் துடைத்து...

முகத்துடன் உதட்டுக்கும்
காயம்பட்ட இடத்திற்கும்
மருந்துடன் சாயம்பூசி
மறுபடியும் வலிகொள்ள...

வலியில்லா இரவொன்று
வரமாக வருமென்று,
அங்கத்தின் அலுப்பெல்லாம்
அக்கனமே அறுத்தெறிந்து...

இயக்கத்தை நிறுத்தியபின்
இறுதியில் இளைப்பாறும்,
ஈனர்களின் வியர்வையின்
வாசத்தினை மறப்பேனோ...

பிண்டத்தின் சதைத் தின்னும்
பிசாசுகளை போலல்லாமல்,
பிடித்தவன் தொடும் சுகம்
இப்பிறவியில் காணேனோ...

முத்தமெனும் பெயரினிலே
முடிந்தவரை குதறிவிட்டு,
பற்களின் தடம் பதிக்கும்
பன்றிகளின் நடுவினிலே...

முகம் பற்றி வாஞ்சையாய்
நெற்றியினை தான் நுகர்ந்து
இதழ் பதிக்கும் இனியவனின்
இருப்பிடத்தை அறிவேனோ...

விருப்பமில்லா விலைமாது
அடையாளத்தை அழித்துவிட்டு,
விலையற்ற மாதுவாய் ஒருவனுக்காய் மாறேனோ...
இறைவா?

**ரா. கணேஷ்**

கனவுகள் ஆர்ப்பரிக்கும் என் வயதுக்கு
கட்டுப்பாடுகள் தருகின்றன
காலை விடியல்....!

**ச. ராஜ் முத்தையதாசன்**

நிசப்தமாய் இருக்கிறது
மாணவர்கள் அற்ற மைதானம்
தரையிறங்கிய
பறவைகள் கொத்தி தின்கின்றன
இறைந்து கிடக்கும் மௌனத்தை

**சிவா முத்துக்குமரன்**

உன் பெயரையெழுதி
காற்றில் வாசமிட்டு
மூச்சையற்று முகாந்திரமிட்டு
தேடிக்கொள்கிறேன்...

மழைநின்றபின் வரும்
வாசனையின் உட்நுகர்வில்
வேர்களின் மண்பிடிப்பை
தளர்த்தி கிளர்ச்சியாகிறேன்..

மருவும் சருகினோசை
கீறிச்செல்லும் சிதாம்புகளின்
நுனி சற்றே குருதிப்புனலில்
நீசமாகி வழிந்தோடுகிறது...

பிறப்பின் சுவாசத்தை
உன் கூந்தல் பூக்காடுகளின்
வியர்வை மழையில்
தனிவர்த்தனமிட்டு
ரீங்காரம் இழைக்கின்றன...

என் கனாக்களின் ஓலங்களை
தேடித்திரிகிற வனாந்திரத்தில்
நீயோர் பேரன்பின் தேவதையாக
இருக்க வாய்ப்பின்
என் மிருகசிரிஷத்தை
கொலை செய்ய காத்திருக்கிறேன்

ராம் பெரியசாமி



பெண் குழந்தைகளுக்கான
பணிவிடைகளை முழுமையாக
செய்ய முடியாமல்
தடுமாறும் தருணங்களில்...

யாருக்கும் தெரியாமல்
இறந்த மனைவியின்
புடவையை
முகத்தில் அழுத்திக்கொள்ளும் போது
நிகழ்ந்து முடிகிறது

ஒரு கணவரின்
கண்ணீர் துடைக்கும் படலம்...!

**வணவை தூரிகா**

கிழியாத
பழைய சட்டையால்
வண்டி துடைக்கும் தருணம்
கடந்து போகும்
பிச்சைகாரனின் பார்வை ஒன்று
நிர்வாண படுத்தி சென்றது
என் இருப்பை...!

**க.ராஜகுமாரன்**

மார்பகத்தை இறுக்கும்படியான சுடிதாரும் அணியவில்லை
காற்றடித்து மார்பகத்தை
காட்ட விலகும் சேலையும் அணியவில்லை
குனிந்து நிமிர்ந்தால்
மார்பகம் தெரியும்
நைட்டியையும் அணியவில்லை
நாகரீகமென்று மார்பகத்தை
முக்கால்வாசி காட்டும்
அரைகுறை மேலாடையும்
அணியவில்லை
தொடைதெரியும் கீழாடையும்
அணியவில்லை
பிறகு எந்த விதத்தில்
காமவெறியை தூண்டியிருக்கும்
அந்த காமுகர்களுக்கு
கழுத்துவரை பொத்தான் போட்ட சட்டையும்
தரைவரை மோதும்
பாவாடையுமணிந்து சென்ற
மார்பகமே முளைவிடாத
பிறப்பைப்பற்றி ஏதுமறியாத
அந்த சின்னஞ்சிறு
பள்ளிச்செல்லும் குழந்தை?

**ரமேஷ் கலை மித்ரன்**

சொற்கள் நிறைந்த வனமொன்றில்
வழிதவறி வந்துவிட்ட
ஊமை ஒருவன்

தூக்கிச் சுமக்கும்
மௌனத்தையெல்லாம்
ஒரு புன்னகையின் வழியாகவோ
ஒரு கண்ணீரின் வழியாகவோ
இறக்கி வைக்க எத்தனிக்கிறான்

கடக்கும் எதிலும்
ஏதோவொன்றை தேடுகிறான்
கண்டெடுத்த எதிலும்
ஏதோவொன்றை இழக்கிறான்

ஒரேநாள் பொழிந்த பெருமழையில் வாழ்நாள் வறட்சியை
தணிக்கிறான்
ஈரம் சொட்டும் மிச்சங்களில்
வாழ்ந்து விட நினைக்கிறான்

சேர்த்து வைத்த வார்த்தைகளுக்கு
சிறகுகள் முளைக்கும் முன்
அவள் வந்து விட பார்க்கிறான்
காத்திருக்கும் காலம் யாவையும்
அவள் காலடியில் வைக்கிறான்

**தனபால் பவானி**



நெற்றி வழித்த மூன்று பட்டையும்
ஒரு நாமமும்
சிவப்பு துண்டிட்ட முண்டாசும்
காக்கி அரைக்கால்
அரைக்கை சட்டையும்
இடக்கை செம்புகாப்பும்
அடையாளத்தோடு...

மேல்பக்க உடைசலை
மறைத்தவாறு
வண்டிக்கு முன்புறம்
செருகப்பட்ட வீரமாத்தி குலசாமிக்கு
ஒரு செம்பருத்தி
இரு பத்திகள் மணக்க
வண்டி நகர்த்துமவர்க்கு...

ஒருமையில்
கையசைத்து
முகம் சுளித்து
இரண்டாவது வீதியின்
முதல் வீடும்
நான்காவது வீடும்
கொட்டும் கழிவுகளில்
மனிதம் மறந்த
கழிவுகளே வண்டியை
அசுத்தப்படுத்துகிறதாம்...

**ஷீலாசிவகுமார்**

# மௌனத்தின் வழி

இரைச்சலின் இளைப்பாறுதல்
காறித்துப்பும் மயான அமைதி
அதன் பாதை,

இரு வார்த்தைகளுக்கு
இடையே பொங்கிவரும்
வெற்றிடத்தில் நிலைகொண்டுள்ள கருந்துளை,

உள், வெளி
மூச்சுகளுக்கு இடையே
நிர்வாணமாய் நிற்கும் நிரந்தரம்.

எண்ணங்களுக்கிடையே
நெடுந்தூரப்பயணம் மௌனத்தின் வழி.

**இரா.வெங்கடேஷ்**

உச்சி வெயில் கருணையின்றி
கடந்து செல்லும் மனிதர்கள்
பொம்மைகளை மணல் வீட்டின்
நிழலில் மறைத்து வைக்கிறது மழலை

**மாமருதன்**

கருவகாட்டு பக்கம் ஆடுமேச்சி திரியிர கருப்பாயிக்கி தெரியும்
செவலாடு
எப்ப குட்டிபோடும்னு
கெழக்க பாத்து நிக்கிற அய்யனாரே பொம்பள சொகத்துக்கு
என்ன செய்ரீரு
வயகாட்டு பொம்மையோட சேந்துக்குறீரோ
குறால கிடா தொரத்தறப்ப
அறுத்து உப்புவச்ச மிதுக்கம்பழத்த
ஒருதரம் உள்ளங்கையால தடவிக்கெலாம்
அதுக்கென்ன முந்திரி தோப்பு முசுரு கடியெல்லாம் தோத்துபுடும்
அவன் செஞ்சான்னா
வடலி குறுத்த விரிச்சா கூடவே கெடந்தரலாம்னு தோணது
அசைஞ்சுகொடுத்தா அறுத்துவீசனும்
ஒன்றகிலோ சதைய
ஆறாத புண்ணுக்குதான கெறங்கி திரியிரீக
ஆடிதீத்தோம்னா அம்புட்டும் சுண்ணாம்பு சேராத கள்ளு கலயம்
கண்ண சிமிட்டி நொங்கு குடிச்சா
ஒனக்கு இந்த நெனப்புதானா
பாலைல கள்ளு வடிஞ்சா
போதுமுனு இருவாம
தலநார எடுத்துகிட்டு இதுக்குதான வந்தீரோ
என் சேலத்துணி நனக்க

ஆனாலும் ஒன் ஒத்தப் பனைநெழலுதான்
எம்புட்டு சொகமாருக்கு....

**வினோத்**



எப்போதும்
படி, படி என்று
நச்சரித்துக் கொண்டிருக்கும்
அப்பாவுக்கும் எனக்கும்
கீரி, பாம்பு உறவுதான்

அப்பா இறந்த போன ஒருநாளில்
இது அப்பா சட்டை பையில் இருந்ததாக
அந்த கடிதத்தை நீட்டினாள் அம்மா

வெற்று காகிதத்தில்
எனது பெயர் எழுதி
அடியில் அப்பாவின்
கைநாட்டு மட்டுமே இருந்தது

அவர் பெயரை மறந்து
என் பெயரை மட்டுமே
எழுதி பழகிய
அப்பாவின் கல்வியை
அறிந்த பிறகுதான்

எனது கல்வியை
கற்க தொடங்கினேன்
என் நேசத்தின் ஆழ வெற்றிடத்தில்
அப்பாவின் பெயரெழுதி

**சுயம்பு**

நீங்கள் என்ன வேண்டுமானாலும்
நினைத்துக்கொள்ளுங்கள்...
உங்களுக்கும் எனக்கும்
ஒரேவொரு வித்தியாசம்தான்...
நீங்கள்
கனத்த கவலைகளோடு வாய்க்குள்ளேயே
முணுமுணுத்து அழுதபடியே
மனதோடு புலம்புகிறீர்கள்..!
நான்
கவலைகளற்றவனாய்
உள்ளத்தில் வஞ்சமின்றி
வாய்விட்டு சிரித்தப்படியே
காற்றோடு கதைக்கிறேன்..!
ஆனால் என்னை மட்டுமே
அப்படி அழைக்கிறீர்களே..!
எல்லோருக்கும்தானே பொருந்துகிறது
அந்தப் பெயர்..!
‘பைத்தியம்’

**குமரன்**

நீங்க எவ்ளோ நீளம்??
எனக்கேட்டு கைகளால்
முழம் வைத்து என்னை
அளக்கிறாள் குட்டிம்மா
பூவாகிறேன் நான்...

**மஞ்சு விஸ்வநாதன்**

*கனவுகளை மடித்து பெட்டகத்தில்*
*பதுக்கி வைக்கப்பழகியது இன்று நேற்றல்ல!!*

*சில கிழிந்து சல்லடைகளாய்*
*மாறிப்போயிருந்தது!!*

*சில தனக்குள் அழுது அழுது*
*அழுத்துப்போய் அமைதியாயிருந்தது!!*

*இன்னும் சில*
*தற்கொலை செய்து கொண்டன!!*

*சில கரையான்கள்*
*தமக்கு இரையாக்கிவிட்டதை அவள் அறியாமலில்லை!!*

*அவையேனும் பசி தீரட்டும் என விட்டு விட்டாள்!!*

*கனவுகள் எனும் இருட்டறையில்*
*விழித்திருப்பதில் பயனில்லை என்பது இப்போது அவளுக்கு*
*புரிந்திருக்கும்!!*

*நிச்சயம் இனி கண்கள் மூடி வண்ணக்கனவுகள் காணுவாள்!!*

*அந்த உலகத்திலேனும் அவள்*
*புன்னகைக்கட்டும்!!*

**சப்னா_செய்ன்**



நெரிசலான பேருந்தில்,
இதயத்தை போட்டு
இடம் பிடித்தாலும் தகும்,
உனது இருக்கைக்கு
பின்பக்கத்து இருக்கைக்காக,

தேவதை என
அழைக்கவும் தகுதியானவளே..
ஒரே ஸ்பூனில் உன்னோடு
மதிய உணவை பகிர்ந்துகொள்ளும்
அந்த தெற்றுப்பல் தோழியும்..

தாராளமாக
தாஜ்மஹாலென பெயரிட்டுக்கொள்ளலாம்,
உனது வீட்டிற்கு
எதிர்ப்புறமாய் இருக்குமந்த,
குட்டி ஓட்டு வீட்டிற்கும்..

தூது செல்லும்
புறா இனத்தில் சேர்த்துவிட,
எந்த ஆட்சேபணையும் இருக்காது
உனது நாய்க்குட்டியோடு
நட்பாய் இருக்கும்..
எனது நாய்க்குட்டியை..,

சீப்பை பிடிக்கவே
விரல்கள் நடுங்கினாலும்,
சிற்பிதான் என ஒத்துக்கொள்ளலாம்,
நேர்த்தியாக உனது கூந்தலை
பின்னிவிடும் பாட்டியை,,

இருபது குழந்தைகளுக்கு
டியூசன் எடுத்தாலும்..
இன்னமும் குழந்தைதான்
என சந்தேகமின்றி ஏற்றுக்கொள்ளலாம்..
கொஞ்சமாய் அழுதுவிட்ட பிறகு,,
எனது காதலை ஒப்புக்கொண்டு
அழகாய் சிரித்த உன்னை...!!!

**கவிதை மொழியன்**

கைப்பட எழுதுகிறீர்களா?
சிறு சிறு கோடு, புள்ளி, வளைவு, சுழி,நுனி, கோட்டின் விளிம்பு
முடியும் எல்லை, நீட்டல், தனித்துவ கோட்டுப் பாவனைகள்
அனைத்தும் கண் ஆராயும்

குரல் படப் பேசுகிறீர்களா?
அக்கறை மேவும் அன்பு, அலட்சியம், தவிர்த்தல், முழித்தல்,
முடித்தல், கடமைச் சிரிப்பு, வேறொருவரின் மீது ஏறிய
எண்ணச் சிரிப்பு, தொடர்பற்ற நகைப்பு எல்லாம் பார்க்கும் மனம்

நான் யாரோவாகத்தான் இருந்து விட்டுப் போகிறேன் எழுத்தோ
பேசசோ என்னுடன் என்கையில் சற்று உண்மையாகவும்
இருந்து விட்டுப் போங்கள்.
ஏனெனில் எல்லாவற்றுக்குள்ளும் இதயமதித் தேடும்
என் போன்ற பைத்தியங்கள் இன்னுமிருக்கலாம் உங்கள் அருகிலும்

**அகராதி**

# அப்பாவின் ரகசியப் பெட்டி

என்னிடம் காட்டாமல் எப்போதும் ஒளித்துக் கொள்ளும் சிறு
பெட்டி ஒன்று அப்பாவிடம் இருந்தது

நான் வந்தால் மெதுவாக மூடி வைப்பதும்
பீரோவில் பூட்டி வைப்பதுமாய் வருடங்கள் கடந்தோடின

அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்பதற்கு புன்னகை
மட்டுமே பதிலாய் இருந்தது

என் தலைப் பிரசவத்தில் முடிவில் அரை மயக்கத்தில் இருந்தபோது
என் பெண் குழந்தைக்கு மிக அருகில் இருந்தது அந்த சிறுபெட்டி

பெட்டியின் மேல் எழுதி இருந்த வாசகம்

'என் மகள் என்னும் தேவதை வைத்து விளையாடிய
பொருட்கள் தேவதையின் தேவதைக்கு மட்டும்'

**அகதா**



தொட்டிலில் சிறுநீர் கழித்த
சிறு குழந்தைக்குத் தெரிய வாய்ப்பில்லை.
கட்டியதுபோக தன் தாயிடம் இருப்பது
இந்த ஒரு சேலைதானென்று

**வெ.தமிழ்க்கனல்**

பிரம்மிப்பின் பேராவல் தீர்ந்த பின்
ஓய்ந்து போகும் உறவுகளை
அத்தனை எளிதாக உணர்த்தி நிற்கிறது
அவளின் செய்கை...

தன்னைக் கவர்ந்த பொம்மையினை
அடம்பிடித்து சொந்தமாக்கிக்
கொள்கிறாள் வீனா...

பண்ணிசைத்து பொன் தெளிக்க
அங்காடியிலிருந்த பொம்மை
அவள் மடியில் திழைக்கிறது...

அதன் கண்சிமிட்டலுக்கும்
கை தட்டுகிறாள்..
பிடித்த உணவுகளும்
ஒடித்த சோகங்களும்
ஒன்றாகப் பகிர்கிறாள்....

அளைந்து அளைந்து சலித்துப் போகிறது
அந்த அழகு பொம்மை அவளுக்கு...!

பிரம்மிப்பின் பேராவல்
தானாகத் தீர்கிறது...
அறிதலின் ஆனந்தம்
நாளடைவில் சோர்கிறது...
"சில உறவுகளைப் போல..."

**றியாஸா எம் ஸவாஹிர்**

# பரமபதம்

எழுத்துகளுக்குள் உறைந்து கிடக்கின்றன
என் வலிகளும், கோபங்களும்
மான, அவமானங்கள்
மாய்த்துவிடுமோ என்ற
அச்சமாக உள்ளது
வெற்றியை கொண்டாட
தோற்றவனின் கரவோசை
தேவையாய் உள்ளது
எவ்வளவு வன்மமிருந்தும்
மரணத்தில் மன்னிக்கத் தோன்றுகிறது
செத்து விழும் மரங்கள்
மயிருக்கு இணையாகி
விட்டதா?
உயிரோடுதான் இருக்கிறோம்
சகித்துக் கொண்டு
வாழ
காலம் வாழ்வை இழந்து
விக்கித்து நிற்கிறது
எங்கு போய் விடும்
இந்த பரமபத
பாம்புகள் எனற
கேள்விகளுடன்.

**தி. பழனிவேல்**

நான் நினைத்து போல் வாழ்க்கை
அவ்வளவு சுலமானதாய் இருக்கவில்லை....

சிறு சம்பவம் வாழ்க்கையை
புரட்டி போட்டதில் பத்து வருடத்தோடு
பால்யம் தொலைந்து போயிருந்தது..

கில்லியும் பம்பரமும் இன்னும்
ஏக்கத்தில் பூத்திருக்கின்றன..

குட்டி போடும் என தீர்க்கமாய்
நம்பிய மயிலிறகு வளராமல்
அப்படியே நின்று விட்டது ..
என் படிப்பை போலவே..

கடன்கார்கள் வருகை கொஞ்சம்
குறைந்திருக்கிறது...

இன்னும் கூட பழைய பள்ளி
நண்பர்கள் கிரிக்கெட் ஆடி
கொண்டுதானிருக்கிறார்கள்..

என் முதலாளி எனை எட்டு மணிக்கு
முன் வீட்டிற்கு விடுவதில்லை..

இறந்து போன என் அப்பா
வயதுடையவர்கள் வண்டியில்
வேகமாய் போகும்போது
அடி வயிறிலிருந்து கத்த வேண்டும்
போல் இருக்கிறது..
தயவு செய்து 'தலைக்கவசம்'
அணிந்து கொள்ளுங்கள் என...

**ஆனந்த குமார்**



.

தன் வழியினை
தானே தேர்ந்தெடுக்கிறது நதி....

பட்டாம்பூச்சிகளை
காணவில்லை எனும்
நம் வீட்டில் தோட்டமில்லை....

நிலா தேய்வதாய் நாமும்
பூமி தேய்வதாய் நிலவும்....

நட்சத்திரங்களை நாமும்
நட்சத்திரங்கள் நம்மையும்
எண்ணிக்கொண்டிருக்கிறோம்....

நீங்கள் தந்த
துளி நீருக்கென
உங்களுக்கான நிழலை
வளர்க்கிறது செடி....

மயிலிறகு
குட்டியிட்டிருக்கிறது
காணத்தான் நமக்கு
நேரமில்லை....

காற்றிலொன்றும்
வெப்பமில்லை நம்
தேகம்தான்
குளிர்ந்திருக்கிறது...

**வீ.கதிரவன்**

# ஆடு களம்

முளை விடும் மண்ணில்
களை நுழைகிறது;
சப்பாத்துக் கால்களால்
பயிர் நசுங்குகிறது
ஊர் பார்க்க
உன்மத்தம் ஆடுகிறது!
அளக்கப்படும் நிலமெல்லாம்
களம் காண்கிறது!
ஆணைகள்
பயிர் மேய்கின்றன!
ஆதரவில்
விலங்கேறுகின்றன!
பூமித் தாய் இன்னும்
பொறுமையாகத்தான் இருக்கிறாள்!

**சோமு.சக்தி**

காலியான பிளாஸ்டிக்
கவரில் காற்றை நிரப்பி
அது "படாரென்ற"
ஓசையுடன் வெடிக்கும் ஒரு நொடி
போதுமானதாக இருந்தது
ஐம்பது வருடங்கள்
பின்னோக்கிச் சென்றுவர

**அன்புக்குமரன்**

எனது மௌனங்களை
உதறியபடியே இருக்கிறேன்
பேரிரைச்சலாக இருக்கிறது
நள்ளிரவு பறவையின் ஓசையை
ஏதோ ஒரு நாள் கண்ணுற்ற
ஆற்றின் சலசலப்பை
ஓடி ஒளிய வைத்த பகலின்
இடியோசையை
காரியங்களுக்கான காணிக்கையாக
வந்து சேர்ந்தவை யாவும்
புதையுண்ட சொற்களின்
உயிர்த்தெழுதலாக உதறியபடியிருக்கிறேன்

**க.அம்சப்ரியா**

மெல்லத் தூறலிடுகிறது வானம்!
ஊடுருவி உள்நுழைந்ததைச் சாரலென இறைத்துக்
கடந்துபோகிறது காற்று!
திடீரென வலுத்தும் பருத்தும்
பொழியத் தொடங்குகிறது மழை!
கோடை வெப்பம் குறைந்து
குளிரத் தொடங்கியிருக்கிறது
காற்றும் கரிசலும்!
கொஞ்சமும் குறையவில்லை
அராஜகத் தலைமைகளின்மீதான
கொதிப்பும் எரிச்சலும்!

**வளவன் கரிகாலன்**



# காத்திருந்ததேயில்லை

கோப்பைத்தேநீரின்
பதச்சூட்டில் நீ கரைவதேயில்லை

ரசனையின் ருசியில்
வானமாய் நீ தீர்வதேயில்லை

வாசிக்கும் பொழுதெல்லாம்
இடையெழுத்தாய் நீ ஓடியதேயில்லை

எல்லைக்கென காத்திருக்கும்
பேராராய் நீ கரையமைத்ததேயில்லை

கையூட்டுப் பணத்தின்
பதுக்கமாய் நீ மறைந்ததேயில்லை

அரக்கனின் பரிவில்
இசையாய் நீ மௌனித்தேயில்லை

கவுளிச் சத்தக்கூட்டில்
உன் வருகை பொய்த்ததேயில்லை
அந்த பொழுதில்
நீ எழுதியதை நான் கவனித்ததேயில்லை
இன்றும் சன்னலின் விளிம்பினில்
மழையின் ஈரமாய் பொழுதுகள்தோரும்
நான் காத்திருந்ததேயில்லை

**கலைவாணி**

பாடல் வரிகள் இரண்டை
திருடி கவிதையென தருவேன் உன்னிடம்...

மக்கு மரமண்டை
நீ
அதை
இரண்டு நாள்
கழித்துத்தான் கண்டுபிடிப்பாய்.

பின்பு
வந்து சண்டை போடுவாய் என்னோடு..

அப்போது
கோபம் ஒழுகும்
உன் முகத்தை பார்த்ததும்

மீண்டும் ஒரு கவிதை
எழுதி தந்து
உன்னை சமாதானம்
செய்துவிடுவேன்....!

இம்முறை
எப்படியும்
நான்கு நாட்களாவது
ஆகும்..
நீ கண்டுபிடிக்க...

**பிரபு பரமராஜ்**

# அப்பாவின் குடை

வேட்டி சட்டையுடுத்தி
மேலே துண்டு போட்டு
செருப்பில் கால் நுழைக்கும்போதே
கை குடை தேடும்

ஊன்றுகோல் தவிர்த்த முதுமையின் பெருமிதம்
ஊன்றி நடப்பார் நெஞ்சு நிமிர்த்தி

வெயிலோ மழையோ
வலுவான குடை பற்ற
வலுவற்றுபோன கரம்
சுமையை பகிர்ந்துகொண்ட குடை
சுமையாய்...
மூலையில் முடங்கியது

மடக்கு குடைக்கும் மதிய வெயிலுக்கும்
உரசலில்லை
கக்கத்தில் இடுக்கிக் கொள்ளும்
கஷ்டம் தவிர

மழைநாளில் கவிழ்ந்தும் நிமிர்ந்தும்
கண்ணாமூச்சி காட்டியதுடன்
மல்லுக்கட்ட முடியாமல்

மறுபடியும்...

**சக்திஅருளானந்தம்**



மோனத்திரையின் முன்
அமர்ந்திருக்கிறோம்
நீயும் நானும்...
நாவிலிருந்து
உதிர்ந்த சொற்கள்
ஈசலின் இறகுகளென
இறைந்து கிடக்கின்றன..
குறி பார்த்து
வீசிய சொல்லம்புகளின்
நுனியில் சொட்டிக்கொண்டிருக்கும்
குருதியின் வீச்சம்
வீடெங்கும்...
பேசக்கூடாத சொற்கள்
இருபக்கமும்
துருத்திக்கொண்டிருக்கின்றன.
முடித்து வைக்க
யாருமில்லாத நிலையில்
அசைபோட்டு பின்
சமாதானக்கொடிகள்
ஏற்றப்படலாம்...
உடையும் தருணத்துக்காகக்
காத்திருக்கும்
மௌனக் குமிழிகள்....

**மதுரா**

நினைவுகளை அள்ளியள்ளி எறிகிறேன்
கடைமடை திறந்தாற்போன்ற உன்
வார்த்தைகள் என் கைமீறி
கரைபுரண்டு ஓடுகின்றன
என் மௌனம் கொண்டதை
அணையிடவொன்னாமல் களைத்துச்சாய்கிறேன்
மறதியைத்தர மறந்த
இறையை தூற்றத்துணிகிறேன்
மாற்றமென்பதை ஏற்கா மனதை
தேற்றத்தவித்துத்திணறுகிறேன்
விலகிய பின்னான இடைவெளி
இலகுவாகத்தான் இருந்தது
இறுகப்பற்ற முனைகையில்தான்
இறுக்கம் மூர்ச்சையாக்குகிறது
மறதியொன்றே மருந்தென
வரமொன்றை இறைஞ்சிக்கிடக்கிறேன்
தொண்டையில் சிக்கிய சிறுமுள்ளென
அருவித்தொலைக்கிறாய்
உருவியெறியும் வழியின்றி
தவித்துக்கிடக்கிறேன்.

**காயத்ரி**

வதைபடுகின்றன யானைகள்
அங்குசங்களுக்கு
மதம் பிடித்து.

**க. மகுடபதி**

## நான்

*கிழித்தெறியப்பட்டச் செய்தித்தாளாய்
போக்குவரத்து நெரிசலில்
வாகனங்களின் சக்கரங்களில்
சிக்கிக் சிக்கிக் கொண்டும்...
பலரது பாதங்களில் மிதிப்பட்டும்
மதிப்பிழந்து...
கிழக்கும்... மேற்கும்...
வடக்கும்... தெற்கும்...
மேலும்... கீழும்...
இடமும்...வலமும்...
காற்றடிக்கும் சிசைகளிலெல்லாம்
சீந்துவாரற்று...பறக்கிறேன்...!*

*படித்தவர்கள் கிழித்தார்களோ...
படிக்காதவர்கள் கிழித்தார்களோ...
இல்லை...
படிக்கப் பிடிக்காதவர்கள் கிழித்தார்களோ...
எனக்குத் தெரியவில்லை...*

*ஆனால்...*

*எனக்குள் செய்திகள் ஏராளமுண்டு...
என்னை...
படிக்காமல் போனவர்களே அதிகம்...*

*இனி
குப்பைகளுக்குள் போவேனோ...
குப்பையாய் போவேனோ...
மண்ணில் புதைந்து மக்கிப் போவேனோ...*

*இல்லை...*

*நானே பறந்து.... பறந்து...
கோவில் கோபுரத்திலோ...
மசூதியின் பிறையிலோ...
தேவாலயச் சிலுவையிலோ... உச்சத்தில் அடைக்கலமாவேனோ...?*

*இல்லை...*

*மீண்டும் செய்தித்தாளாய் மாறும்
தகுதிப் பெறுவேனோ...
யான் அறியேன்...!!??*

**ரூஃபஸ் வி ஆண்டனி**